Expanding Horizons The 1950s and 1960s were transformative decades for Singapore. Following independence in 1965, Singapore rapidly industrialised and urbanised. Amidst these changes, artists shared an urgent desire to innovate, searching for new artistic languages that would be in step with a modernising city-state. The practice of abstraction in art quickly became synonymous with being modern. Artists contributing to the rise of abstraction in Singapore were often affiliated with the Nanyang Academy of Fine Arts or art societies, while others were self-taught. They drew inspiration from diverse cultural sources, developing distinct artistic vocabularies. Their works range from semi-abstract forms and symbols to those rooted in nature and the real world. This display interweaves artist-focused clusters alongside individual creations. It explores the adventurous spirit that underpinned their practices, as artists moved between abstraction and figuration, and the intersections of art with disciplines like literature, illustration and graphic design.	விரிவடையும் வரம்புகள் 1950களும் 1960களும் சிங்கப்பூருக்கு மாற்றத்தை ஏற்படுத்திய காலப்பகுதிகள் ஆகும். 1965ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பிறகு, சிங்கப்பூர் வேகமாக தொழில்மயமாகவும் நகரமயமாகவும் மாறியது. இந்த மாற்றங்களின் போது, ஓவியர்கள் புதுமை செய்யும் தீவிர விருப்பத்துடன், நவீனமயமாகும் நகர ராஜ்யத்திற்கு ஒத்திசைவாக புதிய கலை மொழிகளை ஆராயத் தொடங்கினர். கலையில் உருவமற்ற வெளிப்பாட்டைப் பயன்படுத்தும் நடைமுறை, மிக விரைவாக நவீனத்துவத்துடன் ஒத்ததாகக் கருதப்படத் தொடங்கியது. சிங்கப்பூரில் அருவக் கலை வளர்ச்சியடைய பங்களித்த கலைஞர்கள், பெரும்பாலும் நன்யாங் நுண்கலைக் கல்லூரி அல்லது கலைச் சங்கங்களுடன் தொடர்புடையவர்களாக இருந்தனர்; மற்ற சிலர் சுயமாகவே கலை கற்றவர்களாக இருந்தனர். அவர்கள் பல்வேறு கலாச்சார வளங்களிலிருந்து உத்வேகம் பெற்று, தனித்துவமான கலை வெளிப்பாட்டு மொழியை உருவாக்கினர். அவர்களின் படைப்புகள், அரை பகுதி உருவமற்ற வடிவங்கள் மற்றும் குறியீடுகள் முதல் இயற்கை மற்றும் நிஜ உலகை அடிப்படையாகக் கொண்ட படைப்புகள் வரை பல்வேறு வகைகளில் அமைந்துள்ளன.

	இந்தக் காட்சிப்படுத்தல், கலைஞர்களை மையமாகக் கொண்ட தொகுப்புகளையும் தனித்தனி படைப்புகளையும் ஒன்றோடொன்று இணைத்து வழங்குகிறது. அருவ மற்றும் உருவக் கலைக்கிடையே ஓவியர்கள் பயணிக்கும்போது, அவர்களின் படைப்புகளுக்கு அடிப்படையாக இருந்த சாகச மனப்பான்மையையும், கலை மற்றும் பிற துறைகளான இலக்கியம், விளக்கப்படம் மற்றும் கிராஃபிக் வடிவமைப்பு ஆகியவற்றுடனான தொடர்பையும் இது ஆராய்கிறது.
Top Lim Yew Kuan (林友权) (b. 1928, China; d. 2021, Singapore) *Ether* 1959 Oil on board Collection of National Gallery Singapore 2015-00619 Bottom Lim Hak Tai (林学大) (b. 1893, China; d. 1963, Singapore) *Riot* 1955 Oil on board Collection of National Gallery Singapore 1998-00706 In *Riot*, Lim Hak Tai paints the tense atmosphere of 1950s Singapore during student protests and workers' strikes. The National Service Riots (1954) and Hock Lee Bus Riots (1955) were among the more well-known historical events of the period. Through angular shapes, fragmented forms and abstract space, the work reflects Lim's engagement with Cubism to convey the turbulence and	மேல் லிம் யூ குவான் (林友权) (பிறப்பு: 1928, சீனா; இறப்பு: 2021, சிங்கப்பூர்) *ஈதர்* 1959 போர்டில் ஆயில் ஓவியம் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் சேகரிப்பு 2015-00619 கீழ் லிம் ஹக் தை (林学大) (பிறப்பு: 1893, சீனா; இறப்பு: 1963, சிங்கப்பூர்) *ரயட்* 1955 போர்டில் ஆயில் ஓவியம் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் சேகரிப்பு 1998-00706 *ரயட்டில்*, மாணவர் போராட்டங்கள் மற்றும் தொழிலாளர் வேலைநிறுத்தங்கள் நடந்த

energy of the period. His integration of Cubist techniques with scenes of social and political struggles highlights his commitment to both artistic experimentation and the engagement with local subject matter.	1950களின் சிங்கப்பூரின் பதற்றமான சூழலை லிம் ஹக் தை வரைந்துள்ளார். இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சம்பவங்களில் நேஷனல் சர்வீஸ் ரயட்ஸ் (1954) மற்றும் ஹாக் லீ பஸ் ரயட்ஸ் (1955) ஆகியவை அடங்கும். கோண வடிவங்கள், சிதைந்த வடிவங்கள் மற்றும் அருவ வெளிப்பாடு ஆகியவற்றின் மூலம், அந்தக் காலகட்டத்தின் கொந்தளிப்பையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்காக லிம் அவர்கள் கியூபிச உத்தியுடன் மேற்கொண்ட கலைப் பரிசோதனையை இந்தப் படைப்பு பிரதிபலிக்கிறது. கியூபிசக் கலை உத்திகளை சமூக மற்றும் அரசியல் போராட்டங்களின் காட்சிகளுடன் அவர் இணைத்த விதம், கலைப் பரிசோதனையிலும் உள்ளூர் கருப்பொருட்களைக் கையாள்வதிலும் அவர் கொண்டிருந்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.
"I do not search for it (style) consciously or create it deliberately. It is a way of bringing order and intelligence to what an artist is doing. It is a memory marker and also a means of connecting different ideas and emotions, fusing them into a creative force." Cheong Soo Pieng, *The Straits Times*, 1983. Cheong Soo Pieng is regarded as a pivotal artist and educator in Singapore's art history. Cheong's synthesis of easel painting and Chinese ink aesthetics, and	"நான் அதை (பாணியை) வேண்டுமென்றே தேடுவதில்லை அல்லது திட்டமிட்டு உருவாக்குவதில்லை. ஒரு கலைஞர் செய்யும் செயல்களுக்கு ஒழுங்கையும் நுண்ணறிவையும் கொண்டு வரும் ஒரு வழியாக அது அமைகிறது. அது நினைவுகளை குறிக்கும் ஒரு அடையாளமும், பல்வேறு எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை இணைத்து,

deep engagement with the cultural life of Southeast Asia cemented his legacy as a leading modern artist. Cheong also experimented with unconventional materials like metal and found objects to create richly textured assemblages. Cheong arrived in Singapore in 1946 and became a teacher at the Nanyang Academy of Fine Arts and Chinese High School. He often signed his paintings with his homonym 三宾 (Si Bin), as can be seen in some of his works exhibited here.	அவற்றை ஒரு படைப்பாற்றல் சக்தியாக ஒன்றிணைக்கும் ஒரு வழியாகவும் இது திகழ்கிறது.” சியோங் சூ பியெங், *தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்*, 1983. சிங்கப்பூர் கலை வரலாற்றில் சியோங் சூ பியெங் ஒரு முக்கிய ஓவியர் மற்றும் கல்வியாளர் எனக் கருதப்படுகிறார். சியோங்கின் ஈசல் ஓவியக் கலையையும் சீன மை ஓவிய அழகியலையும் ஒருங்கிணைத்த அணுகுமுறையும், தென்கிழக்கு ஆசியாவின் பண்பாட்டு வாழ்க்கையுடன் அவர் கொண்டிருந்த ஆழமான ஈடுபாடும், ஒரு முன்னணி நவீன கலைஞராக அவரது மரபை நிலைநிறுத்தியது. மேலும், சியோங் உலோகம் மற்றும் கிடைத்த பொருட்கள் போன்ற வழக்கத்திற்கு மாறான பொருட்களுடன் பரிசோதனை செய்து, செறிவான உருமாற்றங்களைக் கொண்ட படைப்புகளை உருவாக்கினார். சியோங் 1946-இல் சிங்கப்பூருக்கு வந்து, நன்யாங் நுண்கலைக் கல்லூரி மற்றும் சீன உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினார். இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அவரது சில படைப்புகளில் காணப்படுவது போல, அவர் பெரும்பாலும் தனது ஓவியங்களில் 三宾 (சி பின்) என்ற பெயரைக் கையெழுத்தாக இடுவார்.
Cheong Soo Pieng (钟泗滨) (b. 1917, China; d. 1983, Singapore) *Imagination* 1970	சியோங் சூ பியெங் (钟泗滨) (பிறப்பு: 1917, சீனா; இறப்பு: 1983, சிங்கப்பூர்) *கற்பனை*

Metal relief Gift of the artist Collection of National Gallery Singapore ASB-0026 During the late 1960s and 1970s, Cheong Soo Pieng began producing a series of metal reliefs, marking a period of bold artistic experimentation. These metal reliefs incorporated recycled materials and “found” objects into his art, an approach of merging art with non-art objects that was unconventional for his time. By using industrial materials on a flat surface, Cheong imbued *Imagination* with tactile qualities and depth, blurring the lines between painting and sculpture.	1970 மெட்டல் ரிலீஃப் கலைஞரின் அன்பளிப்பு சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு ASB-0026 1960களின் இறுதியில் மற்றும் 1970களில், சியோங் சூ பியெங் ஒரு தொடர் மெட்டல் புடைப்புச் சிற்ப படைப்புகளை உருவாக்கத் தொடங்கினார்; இது துணிச்சலான கலைப் பரிசோதனைகளுக்கான காலமாக அமைந்தது. இவரது உலோகச் சிற்பங்கள் மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் தற்செயலாகக் கண்டெடுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டிருந்தன; கலைப் படைப்புகளுடன் கலை சாராத பொருட்களை இணைக்கும் இத்தகைய அணுகுமுறை அக்காலத்தில் வழக்கத்திற்கு மாறான ஒன்றாக இருந்தது. தட்டையான மேற்பரப்பில் தொழிற்துறைப் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம், ஓவியம் மற்றும் சிற்பம் ஆகியவற்றுக்கு இடையிலான எல்லைகளை மங்கச் செய்து, *கற்பனைக்குத்* தொட்டுணரக்கூடிய தன்மையையும் ஆழத்தையும் சியோங் அளித்தார்.
Khoo Sui Hoe (丘瑞河) (b. 1939, Malaysia) *Children of the Sun* 1965 Oil on canvas Collection of National Gallery Singapore 2018-00045	கூ சுய் ஹோ (丘瑞河) (பிறப்பு: 1939, மலேசியா) *சில்ட்ரன் ஆஃப் தி சன்* 1965 கேன்வாஸில் ஆயில் ஓவியம்

This acquisition was made possible with donations from an individual in honour of the memory of June Tan Poh Hah, Daniel & Soo Khim Teo, Heritage Research Sdn. Bhd., Penang and the Art Adoption and Acquisition Programme of National Gallery Singapore. Vibrant figures exist in harmony with elements of nature as they stretch across a dreamlike landscape. Their elongated limbs resemble *wayang kulit* (shadow puppets). Commissioned for the Singapore Conference Hall by architect Lim Chong Keat, this work complements his vision of integrating modernist design with the tropical climate and regional motifs.	சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 2018-00045 ஜூன் டான் போ ஹா, டேனியல் மற்றும் சூ கிம் தியோ, ஹெரிடேஜ் ரிசர்ச் Sdn. Bhd., பினாங்க் மற்றும் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் கலை தத்தெடுத்தல் மற்றும் சேகரிப்பு திட்டம் ஆகியவற்றின் நினைவாக ஒரு தனிநபர் அளித்த நன்கொடைகள் மூலம் இந்தக் கையகப்படுத்தல் சாத்தியமானது. கனவு போன்றதொரு நிலப்பரப்பில் பரவியிருக்கும் துடிப்பான உருவங்கள், இயற்கையின் கூறுகளுடன் இணக்கமாகத் திகழ்கின்றன. அவற்றின் நீளமான மூட்டுகள் *வயாங் குலிட்* (நிழல் பொம்மைகள்) போல இருக்கும். சிங்கப்பூர் மாநாட்டு மண்டபத்திற்காகக் கட்டிடக் கலைஞர் லிம் சோங் கீட் அவர்களால் நியமிக்கப்பட்ட இந்தப் படைப்பு, நவீனத்துவ வடிவமைப்பை வெப்பமண்டல காலநிலை மற்றும் பிராந்தியக் கூறுகளுடன் ஒருங்கிணைக்கும் அவரது தொலைநோக்குப் பார்வைக்கு வலு சேர்க்கிறது.
"Faces, landscapes, human forms and objects both recognisable and imaginative will reverberate with emotive force. I am aware of the time I was born, the region I was born and my mission. I invite [the] viewer to see what each whimsical world might in fact contain..." Khoo Sui Hoe, *Khoo Sui Hoe: An Overview*, 2015.	"முகங்கள், நிலப்பரப்புகள், மனித உருவங்கள் மற்றும் அடையாளம் காணக்கூடிய அல்லது கற்பனை சார்ந்த பொருட்கள் என அனைத்தும் உணர்வுப்பூர்வமான ஆற்றலுடன் எதிரொலிக்கும். நான் பிறந்த காலமும், பிறந்த இடமும், எனது பணி என்னும் உணர்வும்

Khoo Sui Hoe studied at the Nanyang Academy of Fine Arts under Cheong Soo Pieng, Georgette Chen and Lai Foong Moi. In 1971, he helped establish Alpha Gallery, an artist-run space that fostered artistic discourse and showcased local and international artists. Later, with the support of a grant from the John D. Rockefeller III Fund, Khoo explored printmaking in New York. Landscapes and the human figure are dominant motifs in Khoo's art. He deliberately adopted a highly abstract pictorial style to evoke imaginary worlds and psychological atmospheres.	எனக்குத் தெரியும். ஒவ்வொரு கற்பனை உலகமும் உண்மையில் என்ன கொண்டிருக்கலாம் என்பதைக் காணப் பார்வையாளர்களை அழைக்கிறேன்...” கூ சுய் ஹோ, *கூ சுய் ஹோ: ஒரு பார்வை*, 2015. கூ சுய் ஹோ, நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் சியோங் சூ பியெங், ஜியோர்ஜெட் சென் மற்றும் லாய் பூங் மொய் ஆகியோரிடம் கலை பயின்றார். 1971-இல், அவர் அல்பா கலைக்கூடத்தை நிறுவ உதவினார்; இது ஓவியர்களால் இயக்கப்படும் இடமாக, கலை விவாதங்களை ஊக்குவித்து, உள்ளூர் மற்றும் சர்வதேச ஓவியர்களை அறிமுகப்படுத்தியது. பின்னர், ஜான் டி. ராக்ஃபெல்லர் III நிதியத்தின் மானிய உதவியுடன், கூ நியூயார்க்கில் அச்சுக் கலை குறித்து ஆராய்ந்தார். இயற்கைக் காட்சிகள் மற்றும் மனித உருவங்கள் ஆகியவை கூ அவர்களின் கலையில் ஆதிக்கம் செலுத்தும் கருப்பொருள்களாக உள்ளன. கற்பனை உலகங்களையும் உளவியல் சூழல்களையும் தூண்டுவதற்காக, அவர் வேண்டுமென்றே மிகவும் நுண்மையான சித்திரப் பாணியைக் கையாண்டார்.
Vincent M. Hoisington (b. 1924, Singapore; d. 1972, Singapore) *Civilisation* c. 1970s Polyurethane paint on board	வின்சென்ட் எம். ஹொய்சிங்டன் (பிறப்பு 1924, சிங்கப்பூர்; இறப்பு 1972, சிங்கப்பூர்) *நாகரிகம்* சுமார் 1970கள்

Collection of National Gallery Singapore 2019-00531 In *Civilisation*, a mysterious and haunting landscape unfolds. Disjointed arches and drifting figures seem to appear and disappear within the picture plane. Using industrial polyurethane paint and turpentine, Vincent M. Hoisington applied washes and drips to create a translucent and layered surface. This innovative approach to painting was typical of his practice, which also spanned sculpture and aluminium reliefs. A self-taught artist who blurred the line between art and interior design, Hoisington's inventive use of materials earned him major public and private commissions.	பலகையின் மீது பாலியூரித்தேன் வர்ணம் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 2019-00531 *நாகரிகம்* என்ற படைப்பில், மர்மமான மற்றும் மனதில் பதியும் புவியியல் காட்சி விரிகிறது. துண்டிக்கப்பட்ட வளைவுகள் மற்றும் மிதக்கும் உருவங்கள் ஓவிய மேற்பரப்பில் தோன்றி மறைவது போல் காணப்படுகின்றன. வின்சென்ட் எம். ஹாய்சிங்டன், தொழில்துறை பாலியூரித்தேன் வண்ணப்பூச்சு மற்றும் டர்பன்டைனைப் பயன்படுத்தி, ஒளி ஊடுருவக்கூடிய மற்றும் அடுக்குகள் கொண்ட ஒரு மேற்பரப்பை உருவாக்குவதற்காக, வண்ணப் பூச்சுகளையும் சொட்டுக்களையும் பயன்படுத்தினார். ஓவியத்தில் இந்த புதுமையான அணுகுமுறை, சிற்பம் மற்றும் அலுமினியப் புடைப்புச் சிற்பங்களையும் உள்ளடக்கிய அவரது கலைப்பயிற்சியின் ஒரு தனிச்சிறப்பாக இருந்தது. கலையையும் உட்புற வடிவமைப்பையும் பிரிக்கும் எல்லைக்கோட்டைத் தகர்த்தெறிய, சுயமாகக் கற்றுக்கொண்ட கலைஞரான ஹாய்சிங்டன், பொருட்களைப் புதுமையான முறையில் கையாண்டதன் மூலம் முக்கியமான பொது மற்றும் தனியார் பணிகளைப் பெற்றார்.

"Painting would give me freedom, not business." Tay Bak Koi, *The New Paper*, 1990. Tay Bak Koi is renowned for his imaginative depictions of landscapes and signature buffaloes, an animal which symbolises resilience and tradition in many Southeast Asian cultures. A graduate of the Nanyang Academy of Fine Arts, he studied under influential artists, such as Cheong Soo Pieng and Georgette Chen, and honed his skills in oil and watercolour painting. His body of work spans both figuration and abstraction, showcasing his versatility. In 1969, Tay received a major commission from the Hilton Hotel in Singapore to create 300 paintings for its interior spaces, enabling him to pursue a full- time career as an artist.	"ஓவியம் எனக்கு சுதந்திரத்தை தரும், வியாபாரத்தை அல்ல." டே பக் கோய், *தி நியூ பேப்பர்*, 1990. டே பக் கோய், தனது கற்பனை வளம் மிக்க நிலக்காட்சிச் சித்தரிப்புகளுக்காகவும், பல தென்கிழக்கு ஆசியக் கலாச்சாரங்களில் மீள்திறன் மற்றும் பாரம்பரியத்தின் சின்னமாக விளங்கும் எருமை மாடுகளின் தனித்துவமான ஓவியங்களுக்காகவும் புகழ்பெற்றவர். நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் பட்டம் பெற்ற அவர், சியோங் சூ பியெங் மற்றும் ஜார்ஜெட் சென் போன்ற செல்வாக்கு மிக்க கலைஞர்களிடம் பயின்று, ஆயில் மற்றும் வாட்டர் வண்ண ஓவியத்தில் தனது திறமைகளை மெருகேற்றிக் கொண்டார். அவரது படைப்புகள் உருவச் சித்தரிப்பு மற்றும் அருவக் கலை ஆகிய இரண்டையும் உள்ளடக்கியுள்ளன; இது அவரது பன்முகத்தன்மையை வெளிப்படுத்துகிறது. 1969-இல், சிங்கப்பூரில் உள்ள ஹில்டன் ஹோட்டலின் உட்புறப் பகுதிகளுக்காக 300 ஓவியங்களை உருவாக்கும் ஒரு முக்கியப் பணியை டே பெற்றார்; இது அவர் ஒரு முழுநேரக் கலைஞராகத் தனது தொழிலைத் தொடர வழிவகுத்தது.
Tay Bak Koi (郑木奎) (b. 1939, Singapore; d. 2003, Singapore) Left *Still Life* 1963 Watercolour and ink on paper	டே பக் கோய் (郑木奎) (பிறப்பு 1939, சிங்கப்பூர்; இறப்பு 2003, சிங்கப்பூர்) இடது *நிலையான வாழ்க்கை* 1963

Right *Untitled ('64 Series 3)* 1964 Watercolour and ink on paper Collection of National Gallery Singapore 2024-00339 | 2024-00340 In *Untitled ('64 Series 3)*, Tay Bak Koi applies paint and ink using a wet-on-wet technique and vigorous brushwork to create a mix of soft transitions and expressive intersecting lines. This dynamic composition reflects his interest in texture, movement and spontaneity. Unlike *Still Life*, where barely discernible objects are gathered on a table, this work abandons recognisable forms entirely, focusing instead on the material interactions of paint. As one of Tay's earliest ventures into abstraction, it reveals the artist's evolving experimentation with form and medium.	காகிதத்தில் நீர்வண்ணம் மற்றும் மை வலது *பெயரிடப்படாதது* ('64 *சீரிஸ்* 3) 1964 காகிதத்தில் நீர்வண்ணம் மற்றும் மை சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு: 2024-00339 | 2024-00340 *பெயரிடப்படாதது* ('64 *சீரிஸ்* 3) என்ற படைப்பில், டே பக் கோய், ஈரமான ஓவியப் பரப்பின் மீது ஈரமான வண்ணப்பூச்சு மற்றும் மையைப் பயன்படுத்தி, வலிமையான தூரிகை அசைவுகளுடன் மென்மையான நிற மாற்றங்களையும் வெளிப்பாட்டுத் தன்மை கொண்ட ஒன்றையொன்று கடக்கும் கோடுகளையும் கொண்ட ஒரு கலையை உருவாக்குகிறார். இந்த இயக்கம் நிறைந்த அமைப்பு, உரை, இயக்கம் மற்றும் தானாக நிகழும் செயல்பாடுகளில் அவருக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது. *ஸ்டில் லைஃப்* ஓவியத்தில் தெளிவாக அடையாளம் காண முடியாத பொருட்கள் மேசையின் மீது ஒன்றாக வைக்கப்பட்டிருப்பதைப் போல அல்லாமல், இந்தப் படைப்பு அடையாளம் காணக்கூடிய வடிவங்களை முற்றிலும் தவிர்த்து, வண்ணப்பூச்சுகளுக்கு இடையிலான பொருள் சார்ந்த தொடர்புகளையே மையமாகக் கொண்டுள்ளது. டே பக் கோய் அவர்களின் அருவக் கலை முயற்சிகளில் ஒன்றான இந்த

	ஆரம்பகாலப் படைப்பு, வடிவம் மற்றும் கலை ஊடகத்துடன் அவர் மேற்கொண்டுவரும் பரிசோதனைகள் எவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்தன என்பதை வெளிப்படுத்துகிறது.
Presence Artists have long used the human body to explore identity, the human psyche and social change. As society transformed, artists grappled with how to depict the human figure to reflect the evolving identities of their time. Through deeply personal self-portraits and intimate portrayals of fellow artists and friends, they captured the presence of their subjects and the relationship between artist and sitter, while also exploring personal and social realities. Figuration also took on innovative representational and compositional approaches, demonstrating new aesthetic sensibilities. As art continued to evolve in the 1950s and 1960s, portraiture and still life painting remained foundational for modern artists and a vital mode of expression. At the Nanyang Academy of Fine Arts (NAFA), figurative art—rooted in the direct representation of the physical world and honed through repeated observational drawing sessions—was a cornerstone of education. NAFA became the main centre for artistic training in postwar Singapore, where generations of artists were guided by influential artists who were also teachers, such as Georgette Chen, Chen Wen Hsi, Cheong Soo Pieng and Chen Chong Swee.	உடனிருப்பு கலைஞர்கள் நீண்ட காலமாக மனித உடலைப் பயன்படுத்தி, அடையாளம், மனித மனநிலை மற்றும் சமூக மாற்றம் ஆகியவற்றை ஆராய்ந்து வந்துள்ளனர். சமூகம் உருமாறியபோது, தங்கள் காலத்தின் மாறிவரும் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் வகையில் மனித உருவத்தை எவ்வாறு சித்தரிப்பது என்பது குறித்துக் கலைஞர்கள் போராடினர். ஆழ்ந்த தனிப்பட்ட தன்-உருவப்படங்கள் மற்றும் சக கலைஞர்கள் மற்றும் நண்பர்களின் நெருக்கமான சித்திரங்கள் ஆகியவற்றின் மூலம், அவர்கள் தங்கள் பாடப்பொருட்களின் இருப்பையும் கலைஞருக்கும் உருவப்படத்திற்குப் போஸ் கொடுப்பவருக்கும் இடையிலான உறவையும் படம்பிடித்துக் காட்டியதுடன், தனிப்பட்ட மற்றும் சமூக எதார்த்தங்களையும் ஆராய்ந்தனர். உருவச் சித்தரிப்பானது புதுமையான பிரதிநிதித்துவ மற்றும் அமைப்புமுறை அணுகுமுறைகளையும் கையாண்டு, புதிய அழகியல் உணர்வுகளை வெளிப்படுத்தியது. 1950 மற்றும் 1960-களில் கலை தொடர்ந்து

	பரிணாம வளர்ச்சி அடைந்தபோதும், உருவப்பட ஓவியம் மற்றும் அசைவற்ற பொருட்களை மையமாகக் கொண்ட ஓவியம் (still life painting) ஆகியவை நவீனக் கலைஞர்களுக்கு அடிப்படையானவையாகவும், மிக முக்கியமானதொரு வெளிப்பாட்டு முறையாகவும் தொடர்ந்து திகழ்ந்தன. நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் (NAFA), உடல்சார் உலகத்தை நேரடியாகப் பிரதிபலிப்பதை அடிப்படையாகக் கொண்டதும், தொடர்ந்து நடத்தப்பட்ட உற்றுநோக்கல் வழி வரைதல் பயிற்சிகளின் மூலம் மேம்படுத்தப்பட்டதுமான உருவகக் கலை, கலைக் கல்வியின் முக்கிய அடிப்படையாக இருந்தது. போருக்குப் பிந்தைய சிங்கப்பூரில் கலைப் பயிற்சிக்கான முக்கிய மையமாக NAFA விளங்கியது. அங்கு பல தலைமுறை கலைஞர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்த ஜார்ஜெட் சென், சென் வென் சி, சியோங் சூ பியெங் மற்றும் சென் சோங் ஸ்வீ போன்ற செல்வாக்கு மிக்க கலைஞர்களின் வழிகாட்டுதலின் கீழ் பயிற்சி பெற்றனர்.
Lim Mu Hue (林木化) (b. 1936, Singapore; d. 2008, Singapore) *It's but a dream* 1963 Oil on canvas	லிம் மூ ஹ்யூ (林木化) (பிறப்பு 1936, சிங்கப்பூர்; இறப்பு 2008, சிங்கப்பூர்) *அது வெறும் கனவு* 1963 கேன்வாஸில் ஆயில் ஓவியம்

Collection of NUS Museum, National University of Singapore S2012-0005-052-0 A woman holds a lit cigarette as a second figure emerges from the shadows. From her cigarette smoke comes a street scene that contrasts a hopeful future with her dark present. Painted in 1963, two years before Singapore's separation from Malaysia, the work shows a society poised between anxiety and hope. Lim, then a teacher at the Nanyang Academy of Fine Arts and an illustrator for Nanyang Siang Pau, may have drawn on his dual roles as educator and social observer to present both realism and reflection in this work.	சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் NUS அருங்காட்சியகத் தொகுப்பு S2012-0005-052-0 நிழல்களிலிருந்து மற்றொரு உருவம் வெளிப்படும்போது, அதில் ஒரு பெண் பற்ற வைத்த சிகரெட்டைப் பிடித்திருக்கிறார். அவரது சிகரெட் புகையிலிருந்து ஒரு தெருக் காட்சி விரிகிறது; அது அவருடைய இருண்ட நிகழ்காலத்திற்கு முரணாக, நம்பிக்கைக்குரியதொரு எதிர்காலத்தை முன்வைக்கிறது. சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 1963-இல் வரையப்பட்ட இச்சித்திரம், கவலைக்கும் நம்பிக்கைக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள ஒரு சமூகத்தைக் காட்டுகிறது. அப்போது நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் ஆசிரியராகவும், நன்யாங் சியாங் பாவ் இதழின் ஓவியராகவும் இருந்த லிம், இந்தப் படைப்பில் யதார்த்தவாதத்தையும் ஆழ்ந்த சிந்தனையையும் முன்வைப்பதற்காக, கல்வியாளர் மற்றும் சமூகப் பார்வையாளர் என்ற தனது இரட்டைப் பாத்திரங்களைப் பயன்படுத்தியிருக்கலாம்.
"Although the teachers in your school are practising artists, each painting in his distinctive style, they are not there to teach their own particular art; for an academy's task must always be the guidance of the students in the basic and conservative laws of drawing and painting from life itself."	"உங்கள் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள் தங்களுக்குரிய தனித்துவமான பாணிகளில் ஓவியம் வரையும் கலைஞர்களாக இருந்தாலும், அவர்கள் அங்குத் தங்கள் சொந்தக் கலைப் பாணியைக் கற்றுக்கொடுப்பதற்காக

Georgette Chen, *Nanyang Academy of Fine Arts Class of 1957 Graduation Booklet*, 1957. Georgette Chen is a key figure in Singapore art history and trained in cities like Shanghai, Paris and New York. In 1954, she was invited to teach painting and drawing at the Nanyang Academy of Fine Arts by its founding principal, Lim Hak Tai. Chen taught her students techniques from her overseas training and emphasised discipline and practice when developing one's own artistic style. Besides still-life paintings, she is known for her portraits, including those of her students like Rohani Ismail, an artist who became her lifelong friend.	இல்லை; ஏனெனில், நேரடிப் பார்வையிலிருந்து (உண்மையான வாழ்விலிருந்து) ஓவியம் வரைதலின் அடிப்படை மற்றும் மரபுசார் விதிகளைப் பின்பற்றி மாணவர்களுக்கு வழிகாட்டுவதே ஒரு கலைப் பள்ளியின் பணியாக இருக்க வேண்டும்." ஜியோர்ஜெட் சென், *நன்யாங் நுண்கலைக் கல்லூரி 1957 ஆம் ஆண்டு பட்டம் பெற்றோர் பட்டமளிப்பு விழா கையேடு*, 1957. ஜார்ஜெட் சென் சிங்கப்பூர் கலை வரலாற்றில் ஒரு முக்கிய ஆளுமை பெற்றவர்; இவர் ஷாங்காய், பாரிஸ் மற்றும் நியூயார்க் போன்ற நகரங்களில் பயிற்சி பெற்றவர். 1954 ஆம் ஆண்டு, நன்யாங் நுண்கலைக் கல்லூரியின் நிறுவன முதல்வரான லிம் ஹாக் தாய் அவர்களால், அங்கு ஓவியம் மற்றும் வரைதலைக் கற்பிக்க அவர் அழைக்கப்பட்டார். சென் தனது வெளிநாட்டுப் பயிற்சியின் மூலம் கற்ற நுட்பங்களை மாணவர்களுக்குக் கற்பித்ததுடன், அவரவர் தனித்துவமான கலைப் பாணியை வளர்த்துக்கொள்வதில் ஒழுக்கம் மற்றும் பயிற்சியின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். நிலையான பொருட்களை மையமாகக் கொண்ட ஓவியங்கள் மட்டுமல்லாமல், தனது வாழ்நாள் நண்பராக மாறிய கலைஞரும் தனது மாணவியுமான ரோஹானி இஸ்மாயில் போன்றோரின் உருவப்படங்கள் உட்பட, அவர் வரைந்த

	உருவப்படங்களுக்காகவும் அறியப்படுகிறார்.
Georgette Chen (张荔英) (b. 1906, China; d. 1993, Singapore) *Rohani* 1963 Oil on canvas Gift of the artist's estate Collection of National Gallery Singapore 1994-04116 This portrait features Rohani Ismail, a student of Georgette Chen at the Nanyang Academy of Fine Arts. Seated with poise, she wears a striking red floral dress and a matching headscarf, with a delicate gold pin bearing the letter "R." Rohani and Chen were close friends and often exchanged letters in Bahasa Melayu. Their correspondence reflects the deep mutual respect and admiration they had for each other.	ஜார்ஜெட் சென் (张荔英) (பிறப்பு: 1906, சீனா; இறப்பு: 1993, சிங்கப்பூர்) *ரோஹானி* 1963 கேன்வாஸில் ஆயில் ஓவியம் ஓவியரின் குடும்பச் சேகரிப்பு நன்கொடை சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 1994-04116 இந்தப் படம், நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் ஜார்ஜெட் சென்னின் மாணவியான ரோஹானி இஸ்மாயிலைச் சித்தரிக்கிறது. அவர் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார்; கண்ணைக் கவரும் சிவப்பு நிறப் பூக்கள் கொண்ட ஆடையையும், அதற்குப் பொருத்தமான தலைத்துணியையும் அணிந்திருக்கிறார். அதில், 'R' என்ற எழுத்து பொறிக்கப்பட்ட ஒரு நேர்த்தியான தங்கப் பின் உள்ளது. ரோஹானியும் சென்னும் நெருங்கிய நண்பர்கள்; அவர்கள் மலாய் மொழியில் அடிக்கடி கடிதங்களைப் பரிமாறிக்கொண்டனர். அவர்களது கடிதப் பரிமாற்றம், அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த ஆழ்ந்த பரஸ்பர மரியாதையையும் மதிப்பையும் பிரதிபலிக்கிறது.
"The structure of the body is a very powerful symbol of emotion and feeling; I am fascinated by the immense potential in the use of the figure. Be it a young body	"உடலமைப்பு என்பது உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகளின் மிக வலிமையான ஒரு குறியீடாகும்; மனித உருவத்தைப் பயன்படுத்துவதில்

or an old body, it still conveys a story emotionally, with its parts." Ng Eng Teng, *Ng Eng Teng: art and thoughts*, 1998. Ng Eng Teng was a prolific artist who worked across sculpture, ceramics, painting and drawing. He began his formal artistic training at the Nanyang Academy of Fine Arts, where he was taught by esteemed artists, including Georgette Chen and Cheong Soo Pieng. Encouraged by Chen, he furthered his studies in industrial and studio pottery in England from 1962 to 1964. Ng is most recognised for his expressive sculptures and ceramics that explore the human form and condition.	உள்ள அளப்பரிய சாத்தியக்கூறுகள் என்னை மிகவும் ஈர்க்கின்றன. இளம் உடலோ அல்லது முதிய உடலோ, அது தனது உறுப்புகளின் வாயிலாக உணர்வுப்பூர்வமான ஒரு கதையைத் தொடர்ந்து வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறது." எங் எங் டெங், *எங் எங் டெங்: கலை மற்றும் எண்ணங்கள்*, 1998. எங் எங் டெங் சிற்பம், செராமிக், ஓவியம் மற்றும் வரைதல் ஆகிய பல்வேறு துறைகளில் பணியாற்றிய ஒரு மிகச்சிறந்த கலைஞர். அவர் தனது முறையான கலைப் பயிற்சியை நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் தொடங்கினார்; அங்கு அவருக்கு ஜார்ஜெட் சென் மற்றும் சியோங் சூ பியெங் உள்ளிட்ட புகழ்பெற்ற கலைஞர்கள் கற்பித்தனர். சென் அவர்களின் ஊக்கத்தால், அவர் 1962 முதல் 1964 வரை இங்கிலாந்தில் தொழில்துறை மற்றும் ஸ்டுடியோ மட்பாண்டக் கலையில் தனது படிப்பை மேலும் தொடர்ந்தார். மனித உருவம் மற்றும் நிலையை ஆராயும் அவரது வெளிப்பாடுள்ள சிற்பங்கள் மற்றும் செராமிக்குகளுக்காக எங் மிகவும் அறியப்படுகிறார்.
Ng Eng Teng (黄荣庭) (b. 1934, Singapore; d. 2001, Singapore) *Thy Name is Woman II* c. 1967 Ciment Fondu and wood Collection of NUS Museum, National University of Singapore N1997-0001-287-0	எங் எங் டெங் (黄荣庭) (பிறப்பு 1934, சிங்கப்பூர்; இறப்பு 2001, சிங்கப்பூர்) *தை நேம் இஸ் வுமன் II* சுமார் 1967 சிமெண்ட் ஃபொன்ட் மற்றும் மரம் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் NUS அருங்காட்சியகத் தொகுப்பு

Thy Name is Woman II depicts a seated female figure, whose presence is made stronger by the extension of her head and right foot outward beyond the relief's surface. This clever bridging of surface and space reflects Ng Eng Teng's fascination with sculptural reliefs. For this sculpture, Ng worked with Ciment Fondu, an industrial concrete. He learnt the technique in 1959 from British artist Jean Bullock, whose portrait bust in terracotta is displayed nearby.	N1997-0001-287-0 *தை நேம் இஸ் வுமன் II* சிற்பம், அமர்ந்த நிலையில் உள்ள ஒரு பெண் உருவத்தைச் சித்தரிக்கிறது. அவ்வுருவின் தலையும் வலது பாதமும் புடைப்புச் சிற்பத்தின் மேற்பரப்பிற்கு அப்பால் வெளிப்புறமாக நீட்டப்பட்டிருப்பது, அந்த உருவத்தின் இருப்பை மேலும் வலுப்படுத்துகிறது. மேற்பரப்பையும் வெளிப்புறத்தையும் இவ்வாறு திறமையாக இணைக்கும் விதம், புடைப்புச் சிற்பங்களின் மீது எங் எங் டெங்கிற்கு இருந்த ஈடுபாட்டைப் பிரதிபலிக்கிறது. இந்த சிற்பத்திற்காக, எங் தொழில்துறை சிமெண்டான சிமெண்ட் ஃபொன்ட்டைப் பயன்படுத்தினார். இந்த நுட்பத்தை அவர் 1959-இல் பிரிட்டிஷ் ஓவியர் ஜீன் புலோக் அவர்களிடம் கற்றார்; அவருடைய டெர்ரகோட்டா உருவப்படம் அருகில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
Lim Nang Seng (林浪新) (b. 1916, Malaysia; d. 1987, Singapore) *Cow* c. 1960s Bronze Collection of National Gallery Singapore 2021-00005 This sculpture, *Cow*, tells a powerful story of suffering. The gaunt and malnourished animal expresses the harsh conditions it endured. In the 1960s, when painting dominated the art world, Lim Nang Seng and his peers began exploring three-dimensional	லிம் நாங் செங் (林浪新) (பிறப்பு 1916, மலேசியா; இறப்பு 1987, சிங்கப்பூர்) *மாடு* சுமார் 1960கள் வெண்கலம் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 2021-00005 இந்த *மாடு* சிற்பம், துன்பத்தின் வலுவான கதையைக் கூறுகிறது. மிகவும் சதை குறைந்த, ஊட்டச்சத்து குறைந்த இந்த

forms and depicting realistic subject matter. The archival photograph behind this work documents Singapore's first sculpture exhibition at the National Library in 1967, which included artists like Lim and Aw Eng Kwang—a transformative moment that brought sculptural work into public conversation.	மிருகம், அது எதிர்கொண்ட கடுமையான சூழலை வெளிப்படுத்துகிறது. 1960களில் ஓவியம் கலை உலகில் ஆதிக்கம் செலுத்தியபோது, லிம் நாங் செங் மற்றும் அவரது சக ஓவியர்கள் மூன்று பரிமாண வடிவங்கள் மற்றும் நிஜமான பொருள்களை ஆராயத் தொடங்கினர். இந்த படைப்பின் பின்னால் உள்ள வரலாற்றுப் புகைப்படம், 1967-இல் தேசிய நூலகத்தில் நடைபெற்ற சிங்கப்பூரின் முதல் சிற்பக் கண்காட்சியைப் பதிவு செய்கிறது; இதில் லிம் மற்றும் அவ் எங் க்வாங் போன்ற ஓவியர்கள் கலந்து கொண்டனர். இது சிற்பங்களை பொது விவாதத்திற்குக் கொண்டுவந்த மாற்றத்தைக் குறிக்கும் முக்கிய நிகழ்வாகும்.
Liberating Form and Colour From the 1960s, new ways of thinking about art emerged in Singapore in tandem with developments in the international art world. Many young artists gained new perspectives through travel, exposure to international art publications or studies abroad. Members of the Modern Art Society advocated for new artistic languages that could reflect their changing realities, which were shaped by science, technology and shifting geopolitical tides. In 1962, the Angkatan Pelukis Aneka Daya (Association of Artists of Various Resources) was established to support Malay artists and became active in organising exhibitions, art classes and collaborations in Singapore and the region. The confluence of national, regional and international outlooks	வடிவமும் நிறமும் விடுதலை பெறும் தருணம் 1960களிலிருந்து, சிங்கப்பூரில் கலை குறித்து புதிய சிந்தனைகள் உருவாகத் தொடங்கின இது சர்வதேச கலை உலகில் நடந்த முன்னேற்றங்களுடன் இணைந்து நடைபெற்றது. பல இளம் ஓவியர்கள் பயணம், சர்வதேச கலை இதழ்கள் மற்றும் வெளிநாட்டு படிப்புகள் மூலம் புதிய பார்வைகளைப் பெற்றனர். அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மாறிவரும் புவிசார் அரசியல் சூழல்களால் வடிவமைக்கப்பட்ட தங்கள் மாறிவரும் யதார்த்தங்களை வெளிப்படுத்தக்கூடிய புதிய கலை மொழிகளுக்காக 'நவீன

became a wellspring of creative freedom in their visual sensibilities. Instead of relying on narrative content, artists explored how aspects of form—compositional elements like line, shape and colour—could become meaningful components in themselves, communicating meaning while engaging visual perception. They experimented with colour, brushwork and everyday materials to express concepts like harmony and emotion, the spiritual and the cosmic. Others innovated upon traditional art forms such as batik, drawing out tensions between tradition and modernity. The multitude of artistic and cultural exchanges in this period also led to a diversity of stylistic approaches.	கலைச் சங்கத்தின்' உறுப்பினர்கள் வாதிட்டனர். 1962-ஆம் ஆண்டில், மலாய் கலைஞர்களுக்கு ஆதரவளிப்பதற்காக 'அங்காட்டன் பெலுக்கிஸ் அனேகா டாயா' (பல்வேறு வளங்களைக் கொண்ட கலைஞர்களின் சங்கம்) நிறுவப்பட்டது; இச்சங்கம் சிங்கப்பூரிலும் அப்பிராந்தியத்திலும் கண்காட்சிகள், கலை வகுப்புகள் மற்றும் கூட்டு முயற்சிகளை ஏற்பாடு செய்வதில் தீவிரமாகச் செயல்பட்டது. தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச பார்வைகளின் சங்கமம், அவர்களின் காட்சிக் கலை உணர்வில் படைப்பாற்றல் சுதந்திரத்தின் ஊற்றாக அமைந்தது. கதை சொல்லும் உள்ளடக்கத்தைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, கோடு, வடிவம் மற்றும் நிறம் போன்ற அமைப்புக் கூறுகள் எவ்வாறு தாமாகவே அர்த்தமுள்ள கூறுகளாக மாறி, காட்சிப் புலனுணர்வை ஈர்க்கும் அதே வேளையில் பொருளையும் வெளிப்படுத்த முடியும் என்பதை கலைஞர்கள் ஆராய்ந்தனர். இணக்கம், உணர்வு, ஆன்மீகம் மற்றும் பிரபஞ்சம் சார்ந்த கருத்துகளை வெளிப்படுத்த அவர்கள் நிறம், தூரிகை பயன்பாடு மற்றும் அன்றாடப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர். மற்றவர்கள் படிக் (batik) போன்ற பாரம்பரியக்

	கலை வடிவங்களில் புதுமைகளைப் புகுத்தி, பாரம்பரியத்திற்கும் நவீனத்திற்கும் இடையிலான முரண்பாடுகளை வெளிப்படுத்தினர். இந்த காலகட்டத்தில் நடந்த பல்வேறு கலை மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள், பன்முகமான பாணி அணுகுமுறைகளையும் உருவாக்கின.
Chen Wen Hsi (陈文希) (b. 1906, China; d. 1991, Singapore) On Chen Wen Hsi’s murals at 5 Kingsmead Road 2025 Video, single-channel, 4:3 aspect ratio, colour and sound (stereo), 5 min 35 sec Collection of National Gallery Singapore Library & Archive Chen Wen Hsi created two landmark abstract mural paintings for his home on 5 Kingsmead Road, Bukit Timah, where he lived and worked from 1955 to 1991. The larger of the two, titled *Studio*, spans a purpose-built wall at the front porch; the second appears on the reverse side. Both works reflect Chen’s bold experimentation with geometric planes and fragmented compositions which challenged art’s traditional genres of landscapes, nudes and still life. Although the works have deteriorated over time, they have since been meticulously restored, preserving an important facet of his artistic legacy and offering insight into his explorations beyond traditional mediums.	சென் வென் ஹ்சி (陈文希) (பிறப்பு: 1906, சீனா; இறப்பு: 1991, சிங்கப்பூர்) 5 கிங்ஸ்மீட் சாலையில் சென் வென் ஹசியின் சுவர் ஓவியங்கள் குறித்து 2025 வீடியோ, ஒற்றை சேனல், 4:3 விகிதம், வண்ணம் மற்றும் ஒலி (ஸ்டீரியோ), 5 நிமிடம் 35 விநாடிகள் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் நூலகம் மற்றும் காப்பகத்தின் சேகரிப்பு சென் வென் ஹ்சி, புக்கிட் திமாவில் உள்ள 5 கிங்ஸ்மீட் சாலையில் 1955 முதல் 1991 வரை வாழ்ந்த மற்றும் பணியாற்றிய அவரது வீட்டிற்காக இரண்டு முக்கியமான கருத்தியல் சுவர் ஓவியங்களை உருவாக்கினார். இரண்டில் பெரியது *ஸ்டுடியோ* என அழைக்கப்படுகிறது; இது முன்புற வராண்டாவில் இதற்கெனவே கட்டப்பட்ட சுவரில் உள்ளது. இரண்டாவது சுவர் ஓவியம் அதன் எதிர்ப்புறத்தில் உள்ளது. இவ்விரு படைப்புகளும், நிலக்காட்சிகள், நிர்வாண ஓவியங்கள் மற்றும் உயிரற்ற பொருட்களின்

	ஓவியங்கள் போன்ற கலையின் பாரம்பரிய வகைகளுக்குச் சவால் விடுத்த, வடிவியல் தளங்கள் மற்றும் துண்டாக்கப்பட்ட கோர்வைகள் குறித்த சென்னின் துணிச்சலான பரிசோதனைகளைப் பிரதிபலிக்கின்றன. இந்த படைப்புகள் காலப்போக்கில் சேதமடைந்தாலும், அவை கவனமாக பழுதுபார்க்கப்பட்டு, அவரது கலை பாரம்பரியத்தின் ஒரு முக்கிய அம்சத்தை பாதுகாத்துள்ளன; மேலும், பாரம்பரிய ஊடகங்களை மீறிய அவரது முயற்சிகளைப் பற்றி பார்வையளிக்கின்றன.
"For me, collage is a liberation from the tyranny of the brush. It injects a significant physical element into methods of operation. You have to know the behaviour of these extraneous materials." Thomas Yeo, *Thomas Yeo: A Retrospective*, 1997. Regarded as a master colourist, Thomas Yeo is renowned for his paintings and collages, which often depict organic forms, landscapes and imaginary spaces. He trained at the Nanyang Academy of Fine Arts before furthering his studies at the Chelsea School of Art and Hammersmith College of Art and Architecture in London, where he immersed himself in the city's art scene. Returning to Singapore in the 1980s, Yeo continually experimented with a wide range of mediums including oil, acrylic, gouache, paper and metal. His works are distinguished by motifs of nature and landscapes, often viewed from a higher vantage point.	"என்னைப் பொறுத்தவரை, கொலாஜ் என்பது தூரிகையின் ஆதிக்கத்திலிருந்து கிடைக்கும் ஒரு விடுதலை. இது செயல்பாட்டு முறைகளில் குறிப்பிடத்தக்கதொரு பௌதீகக் கூறினைச் சேர்க்கிறது. இந்த வெளிப்புறப் பொருட்களின் நடத்தையை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்." தாமஸ் யியோ, *தாமஸ் யியோ: ஒரு பின்னோட்டம்*, 1997. வண்ணங்களைக் கையாள்வதில் வல்லவராகக் கருதப்படும் தாமஸ் யியோ, இயற்கையான வடிவங்கள், நிலப்பரப்புகள் மற்றும் கற்பனை வெளிகளைப் பெரும்பாலும் சித்தரிக்கும் தனது ஓவியங்கள் மற்றும் 'கொலாஜ்' படைப்புகளுக்காகப் புகழ்பெற்றவர். நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் பயிற்சி பெற்ற அவர், பின்னர் லண்டனில் உள்ள செல்சி கலைப்பள்ளி மற்றும் ஹேமர்ஸ்மித் கலை

	மற்றும் கட்டிடக்கலைக் கல்லூரியில் தனது மேல்படிப்பைத் தொடர்ந்தார், அங்கு அவர் அந்நகரின் கலைச் சூழலில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். 1980-களில் சிங்கப்பூருக்குத் திரும்பிய யியோ, ஆயில் வண்ணம், அக்ரிலிக், கவாஷ், காகிதம் மற்றும் உலோகம் உள்ளிட்ட பல்வேறு வகையான ஊடகங்களைக் கொண்டு தொடர்ந்து பரிசோதனைகளை மேற்கொண்டார். இயற்கை மற்றும் நிலப்பரப்பு சார்ந்த கருப்பொருள்கள் அவரது படைப்புகளின் சிறப்பம்சங்களாகும்; இவை பெரும்பாலும் உயரமான ஒரு கோணத்திலிருந்தே காட்சிப்படுத்தப்படுகின்றன.
Thomas Yeo (姚照宏) (b. 1936, Singapore) *Yellow Rider* 1967 Acrylic on canvas Collection of National Gallery Singapore 2020-00351 Inspired by Paolo Uccello's *The Battle of San Romano* (c. 1438–1440), Yellow Rider marks Thomas Yeo's shift from representation to abstraction. Instead of a clear narrative, Yeo distils form into pure colour and shape. Two white ovals suggest horse riders, their figures dissolving into a mustard-hued ground and vibrant masses of colour. A horse emerges not through distinct contours but through fluid, interlocking forms. Here, Yeo reimagines the chaos of battle into an interplay of shapes and hues, inviting visitors to experience the scene instead of merely observing it.	தாமஸ் யியோ (姚照宏) (பிறப்பு: 1936, சிங்கப்பூர்) *யெல்லோ ரைடர்* 1967 கேன்வாஸில் அக்ரிலிக் ஓவியம் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 2020-00351 பாவ்லோ உச்செல்லோவின் தி *பேட்டில் ஆஃப் சான் ரொமானோ* (சுமார் 1438–1440) ஓவியத்தால் ஈர்க்கப்பட்டு, யெல்லோ ரைடர் என்பது தாமஸ் யியோவின் உருவகப்படுத்தப்பட்ட ஓவிய பாணியிலிருந்து அருவக் கலைப் பாணிக்கான மாற்றத்தைக் குறிக்கிறது. தெளிவான கதைக்களத்திற்குப் பதிலாக, யியோ வடிவங்களைத் தூய நிறங்களாகவும் வடிவங்களாகவும் சுருக்கமாக

	வெளிப்படுத்துகிறார். இரண்டு வெள்ளை நிற நீள்வட்ட வடிவங்கள் குதிரை வீரர்களைச் சுட்டிக்காட்டுகின்றன; அவர்களின் உருவங்கள் கடுகு மஞ்சள் நிறத் தரைப்பரப்பிலும், துடிப்பான வண்ணத் தொகுப்புகளிலும் கரைந்து போகின்றன. தெளிவான வெளிக்கோடுகள் மூலம் அல்லாமல், ஒன்றோடொன்று இணைந்து பாயும் வடிவங்களின் மூலம் ஒரு குதிரையின் உருவம் வெளிப்படுகிறது. இங்கே, யியோ போர்க்களத்தின் குழப்பத்தை வடிவங்களும் வண்ணங்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணையும் ஒரு காட்சியாக மறுவடிவமைக்கிறார். வெறுமனே கவனிப்பதற்குப் பதிலாக, அந்தக் காட்சியை நேரடியாக அனுபவிக்க பார்வையாளர்களை இது அழைக்கிறது.
(After the 1960s, I realised that to be innovative was to abandon all figuration and existing painting techniques. It was only when I moved toward areas where no one else had tread could I then emancipate myself from figuration and advance freely into the realm of abstraction.) Ho Ho Ying, *My Paintings*, 1978. Ho Ho Ying was a painter, writer and art critic, known for his expressive abstraction and calligraphy. A self-taught artist, he co- founded the Modern Art Society, championing innovation in local art. Drawing from Chinese culture, philosophy, calligraphy and Western abstraction, he developed his own distinctive paint-dripping technique in the 1970s.	(1960-களுக்குப் பிறகு, புதுமையாக இருக்க வேண்டுமென்றால், உருவகப் படைப்புகளையும் ஏற்கனவே இருந்த ஓவிய நுட்பங்களையும் முற்றிலுமாகக் கைவிட வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன். வேறு யாரும் இதுவரை சென்றிராத பாதைகளை நோக்கி நான் பயணித்தபோதுதான், உருவகக் கலையிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு, அருவக் கலை உலகிற்குள் சுதந்திரமாக முன்னேற முடிந்தது. ஹோ ஹோ யிங், *மை பெயிண்டிங்ஸ்*, 1978.

	ஹோ ஹோ யிங் ஓர் ஓவியர், எழுத்தாளர் மற்றும் கலை விமர்சகர் ஆவார். அவர் தனது வெளிப்பாட்டுத்தன்மை கொண்ட அருவ ஓவியங்கள் மற்றும் கைஎழுத்துக் கலைக்காக அறியப்பட்டவர். சுயமாகக் கலை கற்றுக்கொண்ட கலைஞரான அவர், உள்ளூர் கலைத் துறையில் புதுமையை ஆதரித்து, மாடர்ன் ஆர்ட் சொசைட்டியை இணைந்து நிறுவினார். சீனப் பண்பாடு, தத்துவம், கையெழுழுத்துக் கலை மற்றும் மேற்கத்திய உருவமற்ற கலை ஆகியவற்றிலிருந்து தாக்கம் பெற்ற அவர், 1970-களில் தனித்துவமான வண்ணப்பூச்சு சொட்டும் ஓவிய நுட்பத்தை உருவாக்கினார்.
Ho Ho Ying (何和应) (b. 1936, China; d. 2022, Singapore) *Composition* 1974 Acrylic on Masonite board Gift of the artist Collection of National Gallery Singapore P-0249 Composition features a dynamic interplay of bold blocks of colour and cascading paint drips. Ho Ho Ying often worked with his paintings laid flat on the floor, tilting and repositioning them to guide the natural movement of free-flowing paint. This process-driven approach was inspired by the spontaneity of American Abstract Expressionism, reflecting Ho's belief in painting as an unrepeatable act of self-discovery. Each gesture, intuitive and unrestrained, captures a moment of instinct and exploration.	ஹோ ஹோ யிங் (何和应) (பிறப்பு: 1936, சீனா; இறப்பு: 2022, சிங்கப்பூர்) *அமைப்பு* 1974 மேசனைட் போர்டில் அக்ரிலிக் ஓவியம் கலைஞரின் அன்பளிப்பு சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு P-0249 கலவை ஓவியத்தில் அடர் நிறக் கட்டங்கள் மற்றும் கீழ்நோக்கி சிந்தும் வர்ணத் துளிகள் ஆகியவற்றின் இயக்கம் நிறைந்த ஒன்றிணைப்பை கொண்டுள்ளது. ஹோ ஹோ யிங் தனது ஓவியங்களைப் பெரும்பாலும் தரையில் விரித்து வைத்து, வண்ணம் இயற்கையாக தானே பரவும் வகையில் அவற்றைச் சாய்த்தும் திருப்பியும் வரைவதில் ஈடுபட்டார். இந்த செயல்முறை சார்ந்த அணுகுமுறை, அமெரிக்க

	கருத்தியல் வெளிப்பாட்டு ஓவியத்தின் தன்னிச்சையான தன்மையால் ஊக்கமடைந்தது; ஓவியம் என்பது ஒருமுறை மட்டும் நிகழும் சுய கண்டுபிடிப்பாக இருக்க வேண்டும் என்ற ஹோவின் நம்பிக்கையை இது வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு இயக்கமும், உள்ளுணர்வும் கட்டுப்பாடற்றதும், ஒரு உள்ளுணர்வு மற்றும் ஆராய்ச்சி தருணத்தைப் பதிவு செய்கிறது.
“My colours express my environment. If you look at them, you’ll see that they are colours of Singapore […] My environment is cramped and urban. I may paint differently if I lived elsewhere.” Goh Beng Kwan, *One-man Show by Goh Beng Kwan*, 1977. Goh Beng Kwan’s practice is rooted in both place and material. He studied art under Chen Wen Hsi and Cheong Soo Pieng at the Chinese High School, before pursuing his art education in the United States, where he engaged with both American Abstract Expressionism and collage in the 1960s. This exposure shaped his distinctive artistic style, which merges Chinese calligraphic strokes with abstraction. Goh’s works are known for their unconventional use of materials like rice paper, fabric and soil to create richly textured compositions that reflect his personal experiences.	“நான் பயன்படுத்தும் நிறங்கள் என் சூழலை வெளிப்படுத்துகின்றன. நீங்கள் அவற்றைப் பார்த்தால், அவை சிங்கப்பூரின் நிறங்கள் என்பதை காணலாம் […] என் சூழல் நெருக்கமும் நகரமயமாகவும் உள்ளது. வேறு இடத்தில் வாழ்ந்திருந்தால், நான் வேறு விதமாக ஓவியம் வரைந்திருக்கக்கூடும்.” கோ பெங் குவான், *கோ பெங் குவான் நிகழ்த்திய ஒற்றை நபர் கண்காட்சி*, 1977. கோ பெங் குவானின் கலை நடைமுறையானது இடம் மற்றும் பொருள் ஆகியவற்றில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அவர் சென் வென் ஹ்சி மற்றும் சியோங் சூ பியெங் ஆகியோரிடம் சீன உயர்நிலைப் பள்ளியில் கலை பயின்றார்; பின்னர் அமெரிக்காவில் கலைக் கல்வியை தொடர்ந்தார்; அங்கு 1960களில் அமெரிக்க கருத்தியல் வெளிப்பாட்டு ஓவியம் மற்றும் கொலாஜ் ஆகியவற்றில் ஈடுபட்டார். இந்த அனுபவம், சீன எழுத்துக்கலைக் கோடுகளையும்

	கருத்தியலையும் இணைக்கும் தனித்துவமான கலை பாணியை உருவாக்க உதவியது. கோவின் படைப்புகள், அரிசி காகிதம், துணி, மண் போன்ற வழக்கமற்ற பொருட்களை பயன்படுத்தி, செறிவான உரை கொண்ட அமைப்புகளை உருவாக்குவதற்காகவும், அவரது தனிப்பட்ட அனுபவங்களை பிரதிபலிப்பதற்காகவும் அறியப்படுகின்றன.
Goh Beng Kwan (吴珉权) (b. 1937, Indonesia) *Black Afternoon* 1963 Acrylic on canvas Collection of National Gallery Singapore 1993-01394 Goh Beng Kwan created *Black Afternoon* in response to the assassination of President John F. Kennedy in 1963. Its sombre colours and expressive brushstrokes convey grief and anguish in response to this tragic, historic event. As a student in New York at that time, Goh's approach to painting was influenced by American Abstract Expressionism—a movement known for its gestural brushstrokes, energetic fields of colour and spontaneity.	கோ பெங் குவான் (吴珉权) (பிறப்பு 1937, இந்தோனேசியா) *பிளாக் ஆஃப்டர்நூன்* 1963 கேன்வாஸில் அக்ரிலிக் ஓவியம் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 1993-01394 கோ பெங் குவான் பிளாக் ஆஃப்டர்நூன் என்ற படைப்பை 1963-இல் அமெரிக்க ஜனாதிபதி ஜான் எஃப். கென்னடி அவர்களின் படுகொலைக்கு எதிர்வினையாக உருவாக்கினார். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சோகம் நிறைந்த நிகழ்வுக்கு எதிர்வினையாக, அதன் இருண்ட நிறங்கள் மற்றும் உணர்வுப்பூர்வமான தூரிகை அடுக்குகள், துக்கத்தையும் வேதனையையும் வெளிப்படுத்துகின்றன. அந்த காலத்தில் நியூயார்க் நகரில் மாணவராக இருந்த கோவின் ஓவிய அணுகுமுறை அமெரிக்க கருத்தியல் வெளிப்பாட்டு ஓவியத்தால் பாதிக்கப்பட்டது; இது இயக்கம் நிறைந்த தூரிகை வேலை, உயிரோட்டமான நிறங்கள் மற்றும்

	தன்னிச்சையான செயல்பாடுகளுக்காக அறியப்பட்டது.
Goh Beng Kwan (吴珉权) (b. 1937, Indonesia) Top *Kreta Ayer Urban Renewal* 1986 Household paint, rice paper, ink and glue on canvas laid on board Bottom *Geomancy* c. 1980s Household paint, ink, Chinese tea-wrapping paper, rice paper, decorative paper, fabric, string, soil, wax and glue on canvas Collection of National Gallery Singapore 2010-03472 | 2003-00226 *Kreta Ayer Urban Renewal* and *Geomancy* showcase Goh Beng Kwan's innovative collage techniques and his engagement with Singapore's evolving urban and cultural transformations in the 1980s. In *Kreta Ayer Urban Renewal*, Goh reinterprets Chinatown from a top-down view, capturing its rapid evolution using dizzying patterns and bold colours. The work responded to ongoing urban redevelopment projects and growing fears that heritage areas will become overly commercialised. *Geomancy* turns to Chinese cosmology, exploring how ritual and belief influence social life, urban form and culture. A dominant circular form, divided into four quadrants with string, it alludes to the *luopan* compass used in feng shui—a form of divination and a system for organising space based on energy flow (qi). More than a symbol, it serves as a compositional device, lending the work a sense of balance and flow.	கோ பெங் குவான் (吴珉权) (பிறப்பு 1937, இந்தோனேசியா) மேல் *க்ரெட்டா அயர் அர்பன் ரினீவல்* 1986 போர்டில் பதிக்கப்பட்ட கேன்வாஸில் வீட்டு வண்ணம், அரிசி காகிதம், மை மற்றும் பசை கீழ் *வாஸ்து* சுமார் 1980கள் வீட்டு வண்ணம், மை, சீன தேயிலை மூடிய காகிதம், அரிசி காகிதம், அலங்காரக் காகிதம், துணி, நூல், மண், மெழுகு மற்றும் பசை கேன்வாஸ் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் சேகரிப்பு 2010-03472 | 2003-00226 *க்ரெட்டா அயர் அர்பன் ரினீவல்* மற்றும் *வாஸ்து* ஆகியவை, 1980களில் சிங்கப்பூரில் நடந்த நகர மற்றும் கலாச்சார மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் கோ பெங் குவானின் புதுமையான கொலாஜ் நுட்பங்களையும் அவரது ஈடுபாட்டையும் காட்டுகின்றன. *க்ரெட்டா அயர் அர்பன் ரினீவல்* படைப்பில், கோ சீன நகரப் பகுதியை மேலிருந்து பார்வையிட்டு, அதில் நிகழும் வேகமான மாற்றங்களை மயக்கும் வடிவங்கள் மற்றும் தைரியமான நிறங்களால் பதிவு செய்கிறார். இந்தப் படைப்பு, தொடர்ந்து நடைபெறும் நகர

	மறுசீரமைப்பு திட்டங்களுக்கும், மரபுடைமை பகுதிகள் மிகவும் வணிகமயமாக்கலுக்கு உள்ளாகுமோ என்ற அதிகரிக்கும் அச்சத்துக்கு எதிர்வினையாக அமைந்தது. *வாஸ்து* படைப்பு சீன பிரபஞ்சக் கோட்பாட்டை நோக்கி, சடங்கு மற்றும் நம்பிக்கை சமூக வாழ்க்கை, நகர வடிவம் மற்றும் கலாச்சாரத்தில் எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பதை ஆராய்கிறது. முக்கியமான வட்ட வடிவம், நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு நூலால் இணைக்கப்பட்டுள்ளது; இது ஃபெங் ஷூயில் பயன்படுத்தப்படும் *லூபான்* திசைகாட்டியை குறிக்கிறது—இது ஒரு வகை ஜோதிடம் மற்றும் சக்தி ஓட்டத்தை (சி) அடிப்படையாகக் கொண்டு இடத்தை அமைக்கும் முறையாகும். ஒரு சின்னமாக மட்டுமல்லாமல், அமைப்பு கருவியாகவும் செயல்பட்டு, படைப்பிற்கு சமநிலை மற்றும் ஓட்டம் போன்ற உணர்வை அளிக்கிறது.
"Just like painting: writing poems is brushing over inter-textured words." Lin Hsin Hsin, *In BYTES We Travel*, 1997. Lin Hsin Hsin is a painter, digital media artist, poet, composer and IT visionary most known for her early forays into media tools and techniques. In addition to academic training in mathematics and computer science, as well as formal certification in music, she also studied under Liu Kang and Cheong Soo Pieng. Consequently, Lin's artworks and writing showcase her knowledge of, and dexterity with, computers and technology, and	"ஓவியம் போலவே: கவிதை எழுதுவது என்பது ஒருவருக்கொருவர் பின்னியுள்ள சொற்களில் தூரிகையை ஓட்டுவது போன்றது." லின் ஹ்சின் ஹ்சின், *இன் பைட்ஸ் வீ டிராவல்*, 1997. லின் ஹ்சின் ஹ்சின் என்பவர் ஓவியர், டிஜிட்டல் மீடியா கலைஞர், கவிஞர், இசையமைப்பாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப முன்னோடி; ஊடக கருவிகள்

demonstrate her observations on natural, social and technological phenomena, making her a unique force in Singapore’s post-independence art landscape.	மற்றும் நுட்பங்களில் ஆரம்ப கால முயற்சிகளுக்காக புகழ்பெற்றவர். கணிதம் மற்றும் கணினி அறிவியல் துறைகளில் கல்வி பயிற்சி, இசையில் அதிகாரப்பூர்வ சான்றிதழ் ஆகியவற்றுடன், லியூ காங் மற்றும் சியோங் சூ பியெங் ஆகியோரிடம் கலை பயின்றார். இதனால், லினின் கலைப்பணிகள் மற்றும் எழுத்துக்கள், கணினி மற்றும் தொழில்நுட்பத்தில் உள்ள அவரது அறிவும் திறமையும், இயற்கை, சமூக மற்றும் தொழில்நுட்ப நிகழ்வுகள் குறித்த அவரது பார்வைகளையும் வெளிப்படுத்துகின்றன, இதனால் சிங்கப்பூர் சுதந்திரத்திற்குப் பிந்தைய கலை உலகில் அவர் தனித்துவமான சக்தியாக திகழ்கிறார்.
Lin Hsin Hsin (林欣欣) (b. 1952, Singapore) *The Computer as Architect* 1977 Oil on canvas Collection of National Gallery Singapore 2021-00530 In the 1970s and 1980s, Lin Hsin Hsin made computing a central theme in her highly abstracted paintings. She recognised its growing presence in the world around her. *In The Computer as Architect*, she envisions how computer-aided design (CAD) would transform architecture and engineering. Through her work, Lin foresaw the increasing role of digital technology in urbanisation.	லின் ஹ்சின் ஹ்சின் (林欣欣) (பிறப்பு: 1952, சிங்கப்பூர்) *தி கம்ப்யூட்டர் ஆஸ் ஆர்க்கிடெக்* 1977 கேன்வாஸில் ஆயில் ஓவியம் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 2021-00530 1970, 1980களில், லின் ஹ்சின் ஹ்சின் கணினியை தனது மிகவும் கருத்தியல் ஓவியங்களில் மையக் கருப்பொருளாக மாற்றினார். தன்னைச் சுற்றியுள்ள உலகில் கணினியின் வளர்ச்சியை அவர் உணர்ந்தார். *தி கம்ப்யூட்டர் ஆஸ் ஆர்க்கிடெக் என்ற படைப்பில்*, கணினி உதவியுடன் கூடிய வடிவமைப்பு (CAD) கட்டிடக் கலை மற்றும் பொறியியலை எவ்வாறு

	மாற்றியமைக்கும் என்பதை அவர் கற்பனை செய்கிறார். தனது படைப்புகளின் மூலம், நகரமயமாக்கலில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் அதிகரிக்கும் பங்கு குறித்து லின் முன்னறிவித்தார்.
"If I take a brush, I can reflect speed or monotony. If I use a fast stroke, I can show time fighting against time. Line is universal, yet people fail to understand this. I come up with colours which are my visual experience in life, my internal landscape." Jaafar Latiff, *The Straits Times*, 1985. Jaafar Latiff was a painter known for his innovative approach to batik, a medium deeply rooted in Southeast Asian tradition. Although widely regarded as a traditional craft, Jaafar transformed batik into a dynamic form of artistic expression. Brilliant colours as well as organic forms and shapes that evoke movement, emotion and rhythm feature prominently in his oeuvre. Beyond his practice, Jaafar taught art, design and new media subjects at the Baharuddin Vocational Institute, LASALLE College of the Arts and the Nanyang Academy of Fine Arts.	"நான் தூரிகையை எடுத்தால், வேகத்தையோ அல்லது சலிப்பூட்டும் தன்மையையோ பிரதிபலிக்க முடியும். நான் விரைவான தூரிகை அசைவுகளை பயன்படுத்தினால், நேரம் நேரத்துடன் போராடுவதை காட்ட முடியும். கோடு என்பது பொதுவானது, ஆனால் மக்கள் இதை புரிந்துகொள்ளவில்லை. நான் என் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து, என் உள்ளார்ந்த காட்சிக் களத்திலிருந்து நிறங்களை உருவாக்குகிறேன்." ஜாஃபார் லத்தீப், *தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்*, 1985. ஜாஃபார் லத்தீப், தென்கிழக்காசிய பாரம்பரியத்தில் ஆழமாக வேரூன்றிய பட்டிக் கலைக்கு புதுமை கொண்ட அணுகுமுறைக்காக அறியப்பட்ட ஓவியர். பட்டிக் பாரம்பரிய கைவினையாக கருதப்பட்டாலும், ஜாஃபார் அதை இயக்கம் நிறைந்த கலை வெளிப்பாட்டு வடிவமாக மாற்றினார். உணர்ச்சி, இயக்கம் மற்றும் ரிதம் ஆகியவற்றை தூண்டும் உயிரோட்டமுள்ள வடிவங்கள் மற்றும் பிரகாசமான நிறங்கள் அவரது படைப்புகளில் முக்கியமாக உள்ளன. தனது கலைப் பணிக்கு அப்பாற்பட்டும்,

	ஜாஃபார் பஹாருத்தீன் தொழில்பயிற்சி நிறுவனம், லாசேல் கலைக்கல்லூரி மற்றும் நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் கலை, வடிவமைப்பு மற்றும் புதிய ஊடக பாடங்களைக் கற்றுக்கொடுத்தார்.
Jaafar Latiff (b. 1937, Singapore; d. 2007, Singapore) *Vision 1/86* 1986 Acrylic on canvas Collection of National Gallery Singapore P-0954 Bold streams of colour and flowing, curvilinear forms fill the canvas in *Vision 1/86*, conveying a sense of energy and movement. Having begun with batik painting in the 1960s, Jaafar Latiff turned to acrylic painting during the 1970s to 1980s. The change allowed him to work at a faster pace. He carried the motifs and rhythms he used in batik into this new medium, harnessing the capacity of acrylic for sharper contrasts in colour, which is evident in the interplay of hues across the canvas.	ஜாஃபார் லத்தீப் (பிறப்பு 1937, சிங்கப்பூர்; இறப்பு 2007, சிங்கப்பூர்) *விசன் 1/86* 1986 கேன்வாஸில் அக்ரிலிக் ஓவியம் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு P-0954 *விசன் 1/86* ஓவியத்தில், துடிப்பான நிற ஓட்டங்கள் மற்றும் வளைகோடு சார்ந்த நெகிழ்வான வடிவங்கள் கேன்வாஸை நிரப்பி, ஆற்றலும் இயக்கமும் கொண்ட உணர்வை வெளிப்படுத்துகின்றன. 1960களில் பட்டிக் ஓவியத்துடன் துவங்கிய ஜாஃபார் லத்தீப், 1970, 1980களில் அக்ரிலிக் ஓவியத்துக்கு மாறினார். இந்த மாற்றம் அவருக்கு விரைவாக வேலை செய்ய வாய்ப்பு அளித்தது. பட்டிக்கில் பயன்படுத்திய கருப்பொருள்கள் மற்றும் ரிதங்களை, அவர் இந்த புதிய ஊடகத்திலும் கொண்டு வந்தார்; அக்ரிலிக்கின் கூர்மையான நிற வேறுபாடுகளை பயன்படுத்தி, கேன்வாஸ் முழுவதும் காணப்படும் வண்ணங்களின் ஊடாட்டத்தில் தெளிவான அமைப்பை உருவாக்கினார்.

"I transfer the same feeling from my poetry to my paintings." Abdul Ghani Hamid, *The Straits Times*, 1999. A writer, poet and artist, Abdul Ghani Hamid saw no boundaries between his creative disciplines. For him, art and literature were deeply connected. In 1962, he co-founded Angkatan Pelukis Aneka Daya (Association of Artists of Various Resources), a collective that championed Malay artists through exhibitions, programmes and art classes. Abdul Ghani Hamid was also a member of Angkatan Sasterawan '50 (The Malay Literary Movement of the '50s), the first literary movement in post-war Singapore. His poetry, essays, plays and art reviews, mostly published in Malay, explored themes of culture, identity and artistic expression. He also contributed caricatures and satirical cartoons—under pen names—in the Malay magazine *Hiboran* and the Sunday newspaper *Berita Minggu* in the 1950s and 1970s.	"என் கவிதைகளிலிருக்கும் அதே உணர்வை என் ஓவியங்களுக்கும் மாற்றுகிறேன்." அப்துல் ஃகனி ஹமீத், *தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்*, 1999. எழுத்தாளர், கவிஞர் மற்றும் ஓவியராக இருந்த அப்துல் ஃகனி ஹமீட், தனது படைப்புத் துறைகளுக்கு எல்லை இல்லை என்று கருதியவர். அவருக்கு கலை மற்றும் இலக்கியம் ஆழமாக இணைந்தவை. 1962 ஆம் ஆண்டு, அவர் அங்கத்தான் பெலுகிஸ் அனேகா டயா (பல்வேறு வளங்களைக் கொண்ட கலைஞர்களின் சங்கம்) என்ற அமைப்பை இணைந்து நிறுவினார். இந்தக் கலைஞர்களின் குழு, கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் கலை வகுப்புகள் மூலம் மலாய் கலைஞர்களை ஆதரித்து அவர்களின் வளர்ச்சியை ஊக்குவித்தது. அப்துல் ஃகனி ஹமீட், போர் பிறகு சிங்கப்பூரில் உருவான முதல் இலக்கிய இயக்கமான Angkatan Sasterawan '50 (1950களின் மலாய் இலக்கிய இயக்கம்) உறுப்பினராகவும் இருந்தார். அவரது கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள் மற்றும் கலை விமர்சனங்கள் பெரும்பாலும் மலாய் மொழியில் வெளியிடப்பட்டன; அவை கலாச்சாரம், அடையாளம் மற்றும் கலை வெளிப்பாடு ஆகிய கருப்பொருள்களை ஆராய்ந்தன. 1950, 1970களில், மலாய் இதழ் *ஹிபோரன்* மற்றும் ஞாயிறு நாளிதழ் *பெரிடா மிங்கு* ஆகியவற்றில்,

	புனைபெயர்களில் காரிகேச்சர் மற்றும் நகைச்சுவை கார்டூன்களை வழங்கினார்.
Abdul Ghani Hamid (b. 1933, Singapore; d. 2014, Singapore) Left *Chempaka Mewangi Pagi* 1995 Paper cut-outs and ink on paper Right *Art Junction, 1995* 1995 Newspaper, paper cut-outs, photograph and ink on paper Collection of National Museum of Singapore 2001-03739 | 2001-03738 These collages by Abdul Ghani Hamid reflect the dynamic relationship between his artistic and literary pursuits. *Chempaka Mewangi Pagi* weaves together poetry he wrote in the 1970s with motifs of nature. *Art Junction, 1995* offers a more personal narrative, assembling photographs of fellow artists, including himself, with newspaper articles he either wrote or in which he was featured. Together, these works transport viewers to his creative lifeworld, where words and images converse and connect with one another.	அப்துல் ஃகனி ஹமீட் (பிறப்பு 1933, சிங்கப்பூர்; இறப்பு 2014, சிங்கப்பூர்) இடது *செம்பாகா மெவாங்கி பகி* 1995 காகிதம் வெட்டப்பட்ட வடிவங்கள் மற்றும் காகிதத்தில் மை வலது *ஆர்ட் ஜங்ஷன், 1995* 1995 செய்தித்தாள், வெட்டப்பட்ட காகித வடிவங்கள், புகைப்படம் மற்றும் காகிதத்தில் மை சிங்கப்பூர் தேசிய அருங்காட்சியக தொகுப்பு 2001-03739 | 2001-03738 அப்துல் ஃகனி ஹமீடின் இந்த கொலாஜ் படைப்புகள், அவரது கலை மற்றும் இலக்கிய முயற்சிகளுக்கிடையிலான இயக்கம் நிறைந்த உறவைப் பிரதிபலிக்கின்றன. *செம்பாகா மெவாங்கி பகி* படைப்பில், அவர் 1970களில் எழுதிய கவிதைகள் மற்றும் இயற்கை கருப்பொருள்கள் ஒன்றாக பின்னப்பட்டுள்ளன. *ஆர்ட் ஜங்ஷன், 1995* என்பது தனிப்பட்ட கதையை வழங்குகிறது; இதில், அவர் மற்றும் அவரது சக ஓவியர்களின் புகைப்படங்கள், அவர் எழுதிய அல்லது இடம்பெற்ற செய்தித்தாள் கட்டுரைகள் ஒன்றாக தொகுக்கப்பட்டுள்ளன. இந்த படைப்புகள் பார்வையாளர்களை அவரது படைப்பாற்றல்

	உலகிற்குக் கொண்டு செல்கின்றன; அங்கு சொற்களும் படங்களும் ஒன்றோடொன்று உரையாடி இணைகின்றன.
Teh Tien Chong (郑殿宗) (b. 1939, Malaysia; d. unknown, New Zealand) *Cosmic Barriers* 1980 Synthetic paint, canvas and wood Gift of the artist Collection of National Gallery Singapore ASB-0017 *Cosmic Barriers* pushes the boundaries of traditional canvas, with patterns and flowing wave-like forms spilling across multiple panels. Influenced by science fiction and the space race, Teh Tien Chong translates abstract concepts of space and time into a physical medium. Using relief techniques, he creates three-dimensional effects, giving his painting a sculptural quality. In doing so, he rethinks where painting ends and sculpture begins.	தே தியென் சோங் (郑殿宗) (பிறப்பு 1939, மலேசியா; இறப்பு தெரியவில்லை, நியூசிலாந்து) *காஸ்மிக் பேரியர்ஸ்* 1980 செயற்கை வண்ணம், கேன்வாஸ் மற்றும் மரம் கலைஞரின் அன்பளிப்பு சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு ASB-0017 *காஸ்மிக் பேரியர்ஸ்* என்ற படைப்பு, பாரம்பரிய கேன்வாஸின் எல்லைகளைத் தாண்டி, பல பலகைகளில் பரவியிருக்கும் அலை போன்ற வடிவங்கள் மற்றும் வடிவமைப்புகளைக் கொண்டுள்ளது. அறிவியல் புனைகதை மற்றும் விண்வெளிப் போட்டியால் பாதிக்கப்பட்ட தே தியென் சோங், இடம் மற்றும் காலத்தின் கருத்தியல் கோட்பாடுகளை உடல் வடிவ ஊடகமாக மாற்றுகிறார். புடைப்புச் சிற்ப நுட்பங்களைப் பயன்படுத்தி, அவர் மூன்று பரிமாண விளைவுகளை உருவாக்குகிறார்; இதன் மூலம் அவரது ஓவியத்திற்கு சிற்பத்திற்கான தன்மை கிடைக்கிறது. இவ்வாறு செய்வதன் மூலம், ஓவியம் முடியும் இடமும் சிற்பம் தொடங்கும் இடமும் குறித்து அவர் மறுபரிசீலனை செய்கிறார்.
Chong Fah Cheong (张华昌)	சோங் ஃபா சியோங் (张华昌)

(b. 1946, Singapore) *Family and One* 1985 Teak and branch of rambutan tree Collection of National Gallery Singapore ASB-0081 Five carved wooden planks rest against each other, each supporting the next in a delicate yet steadfast balance. The space within feels embraced, held together by their connection. Originally titled *Family*, Chong Fah Cheong reworked this sculpture into *Family and One* by adding a fifth plank—its rounded edges and organic form suggesting an expanded notion of family. By placing the work directly on the floor, rather than on a pedestal, Chong invites a more immediate, physical experience with his sculpture.	(பிறப்பு: 1946, சிங்கப்பூர்) *ஃபேமிலி அன்ட் ஒன்* 1985 தேக்கு மற்றும் ரம்புடான் மரக் கிளை சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு ASB-0081 ஐந்து செதுக்கிய மர பலகைகள் ஒன்றோடொன்று சாய்ந்து, ஒவ்வொன்றும் அடுத்ததிற்குத் தாங்குதலாக, மென்மையான ஆனால் உறுதியான சமநிலையை உருவாக்குகின்றன. அவற்றின் இணைப்பால், உள்ளே உள்ள இடம் பாதுகாக்கப்பட்டு, ஒருமித்த உணர்வை ஏற்படுத்துகிறது. முதலில் *ஃபேமிலி* என அழைக்கப்பட்ட இந்த சிற்பத்தில், சோங் ஃபா சியோங் ஐந்தாவது பலகையை சேர்த்து *ஃபேமிலி அன்ட் ஒன்* என மறுபெயரிட்டார்; அதன் வட்டமான விளிம்புகள் மற்றும் உயிரோட்டமான வடிவம், குடும்பத்தின் விரிவான கருத்தை சுட்டிக்காட்டுகிறது. படைப்பை மேடையில் வைக்காமல் நேரடியாக தரையில் வைப்பதன் மூலம், சோங் பார்வையாளர்களை தனது சிற்பத்துடன் உடனடி மற்றும் உடல் அனுபவம் பெற அழைக்கிறார்.
Vectors of the New What could new forms of art look like? As modern art evolved in the 1970s, artists examined the physical form and material qualities of art itself. They mobilised newly available industrial	புதியதின் திசைகள் புதிய கலை வடிவங்கள் எப்படி இருக்கும்?

technologies and materials such as plastic, steel and textiles, redefining what painting and sculpture could be constituted of and look like. Light, colour and rhythm became important elements that transformed the viewer’s perception and experience of art. Artists associated with the Alpha Gallery, a pioneering artist-run space in Singapore, advanced innovative approaches to art and engaged critically with international movements. This period also witnessed significant artistic innovations across other mediums, such as photography, ceramics, printmaking, ink and sculpture. Embracing the modernist ethos of “newness,” artists expanded the possibilities of their chosen mediums to reflect contemporary contexts. They tackled questions about form, materiality, self-expression, nature and the tensions between tradition and innovation. Some ventured into commercial and graphic design, reflecting the multidisciplinary ethos of the time and the deepening entanglements between art and industry.	1970களில் நவீன கலை வளர்ந்தபோது, ஓவியர்கள் பௌதீக வடிவம் மற்றும் கலைக்கான பொருள் தன்மைகளை ஆராய்ந்தனர். அவர்கள், பிளாஸ்டிக், எஃகு மற்றும் துணி வகைகள் போன்ற புதிதாகக் கிடைத்த தொழில்துறை தொழில்நுட்பங்களையும் பொருட்களையும் பயன்படுத்தி, ஓவியம் மற்றும் சிற்பக்கலை எவற்றால் உருவாக்கப்படலாம் மற்றும் எப்படி அமையலாம் என்பதற்கு மறுவரையறை செய்தனர். ஒளி, நிறம் மற்றும் ரிதம் ஆகியவை கலையைப் பற்றிய பார்வையாளர்களின் கண்ணோட்டத்தையும் அனுபவத்தையும் மாற்றியமைத்த முக்கிய கூறுகளாகத் திகழ்ந்தன. முன்னோடி அல்பா கலைக்கூடத்துடன் தொடர்புடைய ஓவியர்கள், சிங்கப்பூரில் ஓவியர்களால் இயக்கப்படும் இடம், கலை குறித்த புதுமையான அணுகுமுறைகளை முன்னெடுத்ததுடன் சர்வதேச கலை இயக்கங்களுடன் விமர்சனரீதியான ஈடுபாட்டையும் கொண்டிருந்தனர். இந்த காலகட்டத்தில் புகைப்படம், செராமிக், அச்சுப்படம், மை மற்றும் சிற்பம் போன்ற பிற ஊடகங்களிலும் குறிப்பிடத்தக்க கலைப் புதுமைகள் நிகழ்ந்தன. “புதியது” என்ற நவீனத்துவ மனப்பான்மையை

	ஏற்றுக்கொண்டு, ஓவியர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த ஊடகங்களில் புதிய வாய்ப்புகளை விரிவுபடுத்தி, நவீன சூழலை பிரதிபலித்தனர். அவர்கள் வடிவம், பொருள் தன்மை, சுய வெளிப்பாடு, இயற்கை மற்றும் பாரம்பரியம்-நவீனத்துவம் இடையிலான பதற்றம் ஆகியவற்றை குறித்த கேள்விகளை முன்வைத்தனர். சிலர் வணிக மற்றும் கிராஃபிக் வடிவமைப்பிலும் ஈடுபட்டனர்; இது அந்த காலத்தின் பன்முகத்தன்மையையும், கலை மற்றும் தொழில்துறைக்கு இடையிலான ஆழமான தொடர்பையும் பிரதிபலிக்கிறது.
Tan Swie Hian (陈瑞献) (b. 1943, Indonesia) 大花海幻觉或冷泉危石新结桥 (*An Illusion of a Floral Sea, or a New Composition of Grotesque Stones*) 1982 Chinese ink and watercolour on rice paper Gift of the YLY Collection Collection of National Gallery Singapore With its enigmatic forms, this work invites multiple interpretations—are they stones or a “floral sea,” as the title suggests? The ambiguity reflects Tan Swie Hian’s engagement with Buddhist philosophy, where perception is seen as fleeting, fluid and subjective. A self-taught artist, Tan works across painting, sculpture, performance, linguistics, writing and translation. Unbound by disciplinary categories, his practice is open- ended, much like the shifting meanings of his works.	தான் ஸ்வீ ஹியன் (陈瑞献) (பிறப்பு 1943, இந்தோனேசியா) 大花海幻觉或冷泉危石新结桥 (பூக்களால் ஆன கடலின் தோற்றமயக்கம், *அல்லது விசித்திரக் கற்களின் புதியதொரு வடிவமைப்பு*) 1982 அரிசி காகிதத்தில் சீன மை மற்றும் வாட்டர் கலர் YLY சேகரிப்பின் நன்கொடை சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு இதன் மர்மமான வடிவங்களுடன், இந்தப் படைப்பு பல்வேறு விதமான விளக்கங்களுக்கு விடை அளிக்கிறது—இவை கற்களா அல்லது தலைப்பு குறிப்பிடுவது போல ஒரு “பூக்களால் ஆன கடலின் தோற்றமயக்கமா"?

	இந்த குழப்பம், பார்வை என்பது நிலையற்றதும், திரவமானதும், தனிப்பட்டதும் என பார்க்கும் புத்த மத தத்துவத்துடன் தான் ஸ்வீ ஹியன் கொண்டுள்ள தொடர்பை பிரதிபலிக்கிறது. சுயமாக கற்றுக்கொண்ட ஓவியராக, ஓவியம், சிற்பம், நிகழ்ச்சி, மொழியியல், எழுத்து மற்றும் மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறார். குறிப்பிட்ட துறைகளின் வரம்புகளுக்கு கட்டுப்படாமல் அவரது கலை நடைமுறை, அவரது படைப்புகள் வெளிப்படுத்தும் மாறிக்கொண்டே இருக்கும் அர்த்தங்களைப் போலவே திறந்த நிலையில் உள்ளது.
Kim Lim (林真金) (b. 1936, Singapore; d. 1997, United Kingdom) *Intervals I + II* 1973 Pine Collection of National Gallery Singapore 2015-00420 *Intervals I + II* comprises several ladder-like wooden structures, each with a spine and a set of prongs. This arrangement represents one of several permutations that were predetermined by Kim Lim. The work embodies Lim's modular and restrained approach to sculpture and her use of light to cast shifting shadows to create visual rhythm. For Lim, the intervals or negative spaces in her work are alive with possibilities, suggesting the unseen rhythms in nature, music and the everyday.	கிம் லிம் (林真金) (பிறப்பு 1936, சிங்கப்பூர்; இறப்பு 1997, ஐக்கிய இராச்சியம்) *இண்டர்வெல்ஸ் I + II* 1973 பைன் மரம் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 2015-00420 இண்டர்வெல்ஸ் *I + II* பல ஏணி போன்ற மர அமைப்புகளைக் கொண்டுள்ளது; ஒவ்வொன்றும் முதுகுத்தண்டு மற்றும் ஒரு குழுவான முனைகளைக் கொண்டுள்ளது. இந்த அமைப்பு, கிம் லிம் அவர்களின் முன்கூட்டியே திட்டமிட்டிருந்த பல மாற்றங்களில் ஒன்றைப் பிரதிபலிக்கிறது. இந்தப் படைப்பு, சிற்பக் கலையில் லிம் பயன்படுத்தும் கூறுசார்ந்த மற்றும் அளவான அணுகுமுறையையும்,

	மாறிக்கொண்டே இருக்கும் நிழல்களை உருவாக்கி ஒரு காட்சிசார் ரிதம் அமைய ஒளி பயன்படுத்தப்படும் விதத்தையும் வெளிப்படுத்துகிறது. லிம்மைப் பொறுத்தவரை, தனது படைப்புகளில் உள்ள இடைவெளிகள் அல்லது வெற்று இடங்கள், இயற்கை, இசை மற்றும் அன்றாட வாழ்க்கையில் காணப்படாத ரிதங்களை சுட்டிக்காட்டும் வகையில், வாய்ப்புகளால் உயிர்ப்புடன் திகழ்கின்றன.
"If you are an artist, you are also a craftsman, a designer. I am wholly involved in my work and my exhibitions. My firm grounding in the Bauhaus has taught me that." Eng Tow, *The Straits Times*, 1982. Eng Tow is an interdisciplinary artist, renowned for her innovative and methodical use of cloth to create effects through relief and colour. She studied under Georgette Chen at the Nanyang Academy of Fine Arts before furthering her education in the United Kingdom, where she encountered Bauhaus pedagogy, which emphasised material exploration and strong design principles. Returning to Singapore in 1981, she became part of the Alpha Group and exhibited with Alpha Gallery. Tow's practice spans textiles, paper and three-dimensional forms, reflecting her intuitive and experimental approach, deeply influenced by nature and metaphysical forces. Beyond traditional art boundaries, she has also worked in stage, textile and book design.	"நீங்கள் ஓவியராக இருந்தால், நீங்கள் ஒரு கைவினையாளர், வடிவமைப்பாளர் ஆகியவர்களாகவும் இருக்கிறீர்கள். நான் என் வேலை மற்றும் கண்காட்சிகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளேன். பாஹவுஸ் பள்ளியில் பெற்ற உறுதியான அடிப்படை இதை எனக்கு கற்றுத்தந்தது." எங் டோ, *தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்*, 1982. எங் டோ ஒரு பன்முகத் துறைக் கலைஞர்; மேடு பள்ள அமைப்புகள் மற்றும் வண்ணங்கள் மூலம் பல்வேறு விளைவுகளை உருவாக்க துணியை புதுமையாகவும் முறையாகவும் பயன்படுத்துவதில் புகழ்பெற்றவர். நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் ஜியோர்ஜெட் சென்னிடம் கலை பயின்ற அவர், பின்னர் ஐக்கிய இராச்சியத்தில் தனது மேற்படிப்பைத் தொடர்ந்தார்; அங்கு பொருள் ஆராய்ச்சி மற்றும் வலுவான வடிவமைப்பு

	கோட்பாடுகளை வலியுறுத்தும் பாஹவுஸ் கற்பித்தல் முறையை அறிந்துகொண்டார். 1981-இல் சிங்கப்பூருக்கு திரும்பிய அவர், அல்பா குழுவில் இணைந்து அல்பா கலைக்கூடத்தில் தனது படைப்புகளைக் காட்சிப்படுத்தினார். டோவின் கலை நடைமுறை துணி, காகிதம் மற்றும் மூன்று பரிமாண வடிவங்களை உள்ளடக்கியது; இது இயற்கை மற்றும் அதீத இயல்புடைய சக்திகளால் ஆழமாக ஈர்க்கப்பட்ட அவரது உள்ளுணர்ச்சி மற்றும் பரிசோதனை சார்ந்த அணுகுமுறையைப் பிரதிபலிக்கிறது. பாரம்பரிய கலை வரம்புகளை மீறி, அவர் மேடை, துணி மற்றும் புத்தக வடிவமைப்பிலும் பணியாற்றியுள்ளார்.
Eng Tow (杜瑛) (b. 1947, Singapore) *Grey Shadows* c. 1970s Quilted stitching on cotton ticking Collection of National Gallery Singapore 2024-00676 Grey Shadows is a subtle and intricate study of texture, rhythm and light. A square ticking cloth—a tightly woven cotton fabric commonly used for bedding—is meticulously stitched and pleated into nine different patterns and orientations. Together, they form a mesmerising grid of rhythmic effects that create an optical illusion of movement. Is this art or textile design? Informed by the Bauhaus concept of the *Gesamtkunstwerk* (total work of art), Eng Tow blurs the boundaries between art and craft and reimagines textiles as a rich	எங் டோ (杜瑛) (பிறப்பு: 1947, சிங்கப்பூர்) *கிரே ஷேடோஸ்* சுமார் 1970கள் பருத்தித் துணியில் குயில்டிங் தையல் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 2024-00676 கிரே ஷேடோஸ் என்பது உரை, ரிதம் மற்றும் ஒளி ஆகியவற்றை நுணுக்கமாகவும் சிக்கலாகவும் ஆராயும் ஓவியம். ஒரு சதுர பம்மல் துணி—படுக்கை விரிப்புகளுக்குப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் இறுக்கமாக நெய்யப்பட்ட பருத்தித் துணி — மிகவும் கவனமாக தையல் செய்து, ஒன்பது விதமான வடிவங்களில்

artistic medium with expansive possibilities.	மடிக்கப்பட்டுள்ளது. இவை ஒன்றாக சேர்ந்து, இயக்கம் போன்ற காட்சிப் பிம்பத்தை உருவாக்கும், 거தம் நிறைந்த மயக்கும் கட்டமைப்பை உருவாக்குகின்றன. இது கலையா அல்லது துணி வடிவமைப்பா? பாஹவுஸ் கற்பித்தல் கோட்பாட்டிலுள்ள *Gesamtkunstwerk* (முழுமையான கலைப் படைப்பு) கருத்தை அடிப்படையாக கொண்டு, எங் டோ கலை மற்றும் கைவினைக்கிடையிலான எல்லைகளை மறையச் செய்து, துணியை வளமான கலை ஊடகமாக புதிய வாய்ப்புகளுடன் மறுவடிவமைக்கிறார்.
Eng Tow (杜瑛) (b. 1947, Singapore) *Untitled – Palms* c. 1983–1984 Textile relief (50% polyester/50% cotton) with polyester wadding stretched over wooden frame Collection of National Gallery Singapore 2016-00742 Commissioned by Times of Singapore Pte. Ltd., this textile relief was photographed and reproduced in the book *A Salute to Singapore* (1984). Stitched in cloth, this work features a burst of pleats that radiate from a central spine, echoing the traveller's palm featured on the cover of the book and coinciding with its fold lines. Eng Tow received numerous public and private commissions in her career, working fluidly as an artist, craftsperson and designer, treating these roles as interconnected modes of working.	எங் டோ (杜瑛) (பிறப்பு: 1947, சிங்கப்பூர்) *பெயரிடப்படாதது – பனைகள்* சுமார் 1983–1984 மரச் சட்டத்தின் மீது பாலியஸ்டர் திணிப்புடன் இழுத்து அமைக்கப்பட்ட, பாலியஸ்டர் மற்றும் பருத்தி கலவையிலான (50% பாலியஸ்டர் / 50% பருத்தி) மேல்தள அமைப்பு கொண்ட ஜவுளிப் புடைப்புச் சிற்பம் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 2016- 00742 Times of Singapore Pte. Ltd. நிறுவனத்தின் வேண்டுகோளின் பேரில் உருவாக்கப்பட்ட இந்த ஜவுளிப் புடைப்புச் சிற்பம், *அ சல்யூட் டு சிங்கப்பூர்* (1984) என்ற புத்தகத்தில் புகைப்படம் எடுத்து வெளியிடப்பட்டது. துணியில் தையல் செய்யப்பட்ட இந்தப் படைப்பில்

	மைய அச்சுப் பகுதியிலிருந்து வெளிநோக்கிப் பரவி விரியும் பல மடிப்புகள் உள்ளன; இது புத்தகத்தின் அட்டையில் உள்ள பயணி பனை மரத்தையும் அதன் மடிப்பு கோடுகளையும் ஒத்திருக்கிறது. எங் டோ தனது பணி வாழ்க்கையில் பொது மற்றும் தனியார் துறைகளிலிருந்து ஏராளமான பணிகளைப் பெற்றார்ஆணைகள் பெற்றார்; ஓவியர், கைவினையாளர் மற்றும் வடிவமைப்பாளர் எனப் பல்வேறு பரிமாணங்களில் இயங்கிய அவர் அனைத்து பணிகளையும் ஒருங்கிணைந்த பணியாகக் கருதி பணியாற்றினார்.
Tan Ping Chiang (陈彬章) (b. 1940, Malaysia) *Music* 1979 Paint, wood, bamboo, mirror and metal Gift of the artist Collection of National Gallery Singapore ASB-0010 This wood relief brings together bamboo rods, circular mirrors and wooden components in a harmonious composition to represent music, highlighting the artist's enduring interest in the subject. Tan Ping Chiang shaped Singapore's art and design scene through education. He was the first head of Applied Arts at the Nanyang Academy of Fine Arts as well as the founding president of the Singapore Contemporary Printmaking Association. His works often explore art, design and music, reflecting his multidisciplinary approach to artmaking.	தான் பிங் சியாங் (陈彬章) (பிறப்பு: 1940, மலேசியா) *இசை* 1979 வண்ணம், மரம், மூங்கில், கண்ணாடி மற்றும் உலோகம் கலைஞரின் அன்பளிப்பு சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு ASB-0010 இந்த மரப் புடைப்புச் சிற்பம், மூங்கில் கம்பிகள், வட்டக் கண்ணாடிகள் மற்றும் மர கூறுகளை இசையை பிரதிபலிக்கும் வகையில் இசைவான அமைப்பில் ஒன்றிணைக்கிறது; இது இந்த கருப்பொருளில் ஓவியருக்கு உள்ள நீடித்த ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது. தான் பிங் சியாங் கல்வி மூலம் சிங்கப்பூரின் கலை மற்றும் வடிவமைப்புத் துறையை

	வடிவமைத்தவர். அவர் நன்யாங் நுண்கலைக் கல்லூரியில் பயன்பாட்டு கலைத்துறையின் முதல் தலைவர் மற்றும் சிங்கப்பூர் நவீன அச்சுப்பட அமைப்பின் நிறுவனர் தலைவராக இருந்தார். அவரது படைப்புகள் பெரும்பாலும் கலை, வடிவமைப்பு மற்றும் இசையை ஆராய்கின்றன; இது கலை உருவாக்கத்தில் அவரது பன்முக அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது.
"Everything can be simplified to the basic shapes of lines and angles." Anthony Poon, *The Straits Times*, 1972. A graduate of the Nanyang Academy of Fine Arts and Byam Shaw School of Art in London, Anthony Poon is celebrated for his geometric and relief paintings, which produce dynamic optical and spatial effects. Influenced by the Bauhaus school, hard-edge painting and Op Art, Poon methodically explored the intersections of art, design and technology. He was best known for his *Wave* series, which began in the early 1970s. Inspired by the fluid motion of frequency waves, the paintings ripple with energy, defying the static nature of traditional painting. From 1973 to 1978, Poon managed Alpha Gallery and was a member of the Alpha Group, a collective of nine artists that shared studios above the gallery.	"எல்லாவற்றையும் கோடுகள் மற்றும் கோணங்களின் அடிப்படை வடிவங்களாக எளிமைப்படுத்தலாம்." ஆந்தனி பூன், *தி ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்*, 1972. நன்யாங் நுண்கலைக் கல்லூரி மற்றும் லண்டனில் உள்ள பையம் ஷா ஸ்கூல் ஆஃப் ஆர்ட் ஆகியவற்றில் பட்டம் பெற்ற ஆந்தனி பூன், வடிவவியல் மற்றும் புடைப்புச் சிற்ப ஓவியங்களுக்காக புகழ்பெற்றவர்; அவை இயக்கம் நிறைந்த காட்சி மற்றும் இட விளைவுகளை உருவாக்குகின்றன. பாஹவுஸ் பள்ளி, ஹார்ட்-எட்ஜ் ஓவியம் மற்றும் ஒப் ஆர்ட் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்ட பூன், கலை, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் இடையிலான தொடர்புகளை முறையாக ஆராய்ந்தார். 1970களின் ஆரம்பத்தில் தொடங்கிய *அலை* தொடருக்காக அவர் மிகவும் அறியப்பட்டவர். அலைகளின் திரவ இயக்கத்தால் ஊக்கமடைந்த இந்த ஓவியங்கள்,

	பாரம்பரிய ஓவியங்களின் நிலைத்த தன்மையை மீறி, ஆற்றலுடன் அலைபாய்கின்றன. 1973 முதல் 1978 வரை, பூன் அல்பா கலைக்கூடத்தை நிர்வகித்தார்; மேலும், ஒன்பது ஓவியர்கள் கொண்ட அல்பா குழுவில் உறுப்பினராக இருந்தார்; அவர்கள் அனைவரும் கலைக்கூடத்தின் மேல் மாடியில் ஸ்டுடியோக்களைப் பகிர்ந்துகொண்டனர்.
Anthony Poon (方谨顺) (b. 1945, Singapore; d. 2006, Singapore) *W on White 2P* c. 1990s Acrylic on canvas-relief Gift of family of the late Anthony Poon Collection of Singapore Art Museum 2007-01065 *W on White 2P* combines the sculptural effects of Anthony Poon's shaped canvases and the sinuous wave patterns of his earlier paintings. Beneath the pristine surface, aluminium struts create a voluminous wave form, inviting light to interact with the canvas and enhancing the sensation of gentle movement. Although painted entirely by hand, the surface appears almost spray-painted, demonstrating Poon's precision and control.	ஆந்தனி பூன் (பாங்ஜின் ஷுன்) (பிறப்பு 1945, சிங்கப்பூர்; இறப்பு 2006, சிங்கப்பூர்) *W on White 2P* சுமார் 1990கள் கேன்வாஸ் புடைப்புச் சிற்பங்களில் அக்ரிலிக் ஓவியம் மறைந்த ஆந்தனி பூனின் குடும்பத்தின் நன்கொடை சிங்கப்பூர் கலை அருங்காட்சியகத்தின் சேகரிப்பு 2007-01065 *W on White 2P* ஆந்தனி பூனால் வடிவமைக்கப்பட்ட கேன்வாஸ்களின் சிற்ப வடிவங்கள் மற்றும் அவரது முன்கால ஓவியங்களில் காணப்படும் வளைந்து நெளிந்து செல்லும் அலை வடிவங்களை ஒன்றிணைக்கிறது. தூய்மையான மேற்பரப்புக்குக் கீழே, அலுமினியம் கம்பிகள் பரந்த அலை வடிவத்தை உருவாக்குகின்றன; இது ஒளியை கேன்வாஸுடன் ஊடாடச் செய்வதோடு, மென்மையான அசைவு உணர்வை அதிகரிக்கிறது. முழுவதும் கையால் வரையப்பட்டாலும், மேற்பரப்பு ஸ்ப்ரே-பெயிண்ட்

	செய்யப்பட்டதுபோல் தோன்றுகிறது; இது பூனின் துல்லியத்தையும் கட்டுப்பாட்டையும் காட்டுகிறது.
Tow Theow Huang (杜超寰) (b. 1945, Singapore) 1. *Boxes Inside* 1977 Acrylic and light Collection of National Gallery Singapore ASB-0006 2. *Untitled (Boxes Series)* 1977 Acrylic and light Collection of Wee Chwee Heng 3. *First Rain* 1977 Acrylic and light Collection of the artist Tow Theow Huang's light sculptures are made by slotting acrylic sheets into a box, allowing their illuminated edges and etched patterns to glow, creating optical effects. First exhibited in 1977 at the artist-run space, Alpha Gallery, visitors at the time were invited to rearrange the sheets to form their own sequence of patterns, encouraging interaction with the work. This spirit of play and participation was central to Tow's approach. He imagined his sculptures as multifaceted objects: decorative elements, sources of light, as well as "toys."	டோ தியோ ஹுவாங் (டு சியாவான்) (பிறப்பு: 1945, சிங்கப்பூர்) 1. *பாக்ஸஸ் இன்சைடு* 1977 அக்ரிலிக் மற்றும் ஒளி சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு ASB-0006 2. *பெயரிடப்படாதது (பாக்ஸஸ் தொடர்)* 1977 அக்ரிலிக் மற்றும் ஒளி வி சுவீ ஹெங்கின் சேகரிப்பு 3. *முதல் மழை* 1977 அக்ரிலிக் மற்றும் ஒளி ஓவியரின் சேகரிப்பு டோ தியோ ஹுவாங் உருவாக்கிய ஒளி சிற்பங்கள், அக்ரிலிக் தாள்களை பெட்டிக்குள் பொருத்துவதன் மூலம் உருவாக்கப்படுகின்றன; அவற்றின் ஒளிரும் விளிம்புகளும் பொறிக்கப்பட்ட வடிவங்களும் பிரகாசித்து, கண்ணுக்கு வியப்பூட்டும் விளைவுகளை உருவாக்குகின்றன. 1977-ஆம் ஆண்டு ஓவியர் இயக்கிய ஆல்ஃபா கலைக்கூடத்தில் முதன்முதலில் காட்சிப்படுத்தப்பட்டபோது, பார்வையாளர்கள் தங்களுக்கேற்றவாறு தாள்களை மறுசீரமைத்து புதிய வடிவங்களை உருவாக்க

	அழைக்கப்பட்டனர்; இது பார்வையாளர்களை நேரடியாக கலந்துகொள்ள ஊக்குவித்தது. இந்த விளையாட்டு மற்றும் பங்கேற்பு மனப்பான்மை டோவின் அணுகுமுறையில் முக்கியமானதாக இருந்தது. அவர் தனது சிற்பங்களை பல்வேறு பரிமாணங்களில் — அலங்காரப் பொருட்கள், ஒளி வழங்கும் ஆதாரங்கள், மேலும் "விளையாட்டு பொம்மைகள்" என்றும் கற்பனை செய்தார்.
Choy Weng Yang (蔡荣恩) (b. 1930, Singapore) *Horizontals I* 1977 Oil on canvas Gift of the artist Collection of National Gallery Singapore P-0235 Horizontal bands of vivid colours fill this painting's surface. Some align to create vertical and horizontal formations, interrupting the flow of colour. Here, Choy Weng Yang explores colour relationships—harmony, contrast, texture and tonality—and how they shape perception. His expressive brushwork and textured paint application evoke emotions rather than follow strict theory. Choy, who encountered the Bauhaus artists György Kepes and Josef Albers in 1973, had an interdisciplinary practice as a painter, curator, exhibition and graphic designer, and believed in unifying art, craft and design into a cohesive visual language.	சாய் வெங் யாங் (சாய் ரொங் என்) (பிறப்பு: 1930, சிங்கப்பூர்) *ஹொரிசாண்டல்ஸ் I* 1977 கேன்வாஸில் ஆயில் ஓவியம் கலைஞரின் அன்பளிப்பு சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு P-0235 உணர்வூட்டும் வண்ணங்களின் கிடைமட்ட பட்டைகள் இந்த ஓவியத்தின் மேற்பரப்பை நிரப்புகின்றன. சில பட்டைகள் செங்குத்தாகவும் கிடைமட்டமாகவும் அமைந்து, வண்ண ஓட்டத்தை இடைநிறுத்துகின்றன. இங்கு சாய் வெங் யாங் வண்ணங்களுக்கு இடையேயான உறவுகளை — அதாவது இணக்கம், முரண், இழைநயம் மற்றும் தொனித்தன்மை போன்றவை —அவை எவ்வாறு நமது பார்வையை வடிவமைக்கின்றன என்பதையும் ஆராய்கிறார். அவரது வெளிப்படையான தூரிகை வேலைப்பாடுகளும், நுணுக்கமான வண்ணப் பூச்சு

	பயன்பாடும் கடுமையான கோட்பாட்டை பின்பற்றாமல் உணர்வுகளைத் தூண்டுகின்றன. 1973-ஆம் ஆண்டு பௌஹாஸ் கலைஞர்கள் ஜியோர்ஜி கேபெஸ் மற்றும் ஜோசப் ஆல்பர்ஸை சந்தித்த சாய், ஓவியர், மேற்பார்வையாளர், கண்காட்சி மற்றும் கிராஃபிக் வடிவமைப்பாளர் எனப் பல துறைகளிலும் செயல்பட்டார்; கலை, கைவினை மற்றும் வடிவமைப்பை ஆகியவற்றை ஒருங்கிணைந்த காட்சி மொழியாக ஒன்றிணைக்க வேண்டும் என்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தார்.
Tan Lip Seng (陈立诚) (b. 1942, Singapore; d. 2025, Singapore) Left *Three Workers* 1965, printed in 2017 Digital print on archival paper Right *Two Workers* 1968, printed in 2017 Digital print on archival paper Collection of National Gallery Singapore 2018-00046 | 2018-00048 This acquisition was made possible with donations to the Art Adoption & Acquisition Programme. Tan Lip Seng's *Two Workers* and *Three Workers* show labourers within Singapore's rapidly transforming landscape in the 1960s. Tan developed an innovative technique known as colour-derivation montage. By layering and manually manipulating multiple colour transparencies, he created visually arresting compositions with rich saturation and intense graphic quality. Originally produced as 35 mm slides that	டான் லிப் செங் (சென் லிச்செங்) (பிறப்பு 1942, சிங்கப்பூர்; இறப்பு 2025, சிங்கப்பூர்) இடது *திரீ வொர்க்கர்ஸ்* 1965, 2017-இல் அச்சிடப்பட்டது பதிவுக் காகிதத்தில் டிஜிட்டல் அச்சு வலது *டூ வொர்க்கர்ஸ்* 1968, 2017-இல் அச்சிடப்பட்டது பதிவுக் காகிதத்தில் டிஜிட்டல் அச்சு சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் சேகரிப்பு 2018-00046 | 2018-00048 கலை தத்தெடுப்பு மற்றும் கலைக் கையகப்படுத்தும் திட்டத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடைகளால் இந்தப் படைப்புகள் சேர்க்கப்பட்டன. டான் லிப் செங் அவர்களின் *டூ வொர்க்கர்ஸ்* மற்றும்

were to be projected, these works showcase his command of high-contrast colour photography. Tan's background as a medical photographer informed his technical precision, which he paired with bold artistic experimentation to document Singapore's changing physical terrain and the human experience within it.	*திரீ வொர்க்கர்ஸ்* ஆகிய ஓவியங்கள் 1960களில் வேகமாக மாறிக்கொண்டிருந்த சிங்கப்பூர் நகரப் பரப்பில் தொழிலாளர்களைக் காட்டுகின்றன. டான், வண்ண வழித்தோன்றல் மொன்டாஜ் எனப்படும் புதுமையான தொழில்நுட்பத்தை உருவாக்கினார். பல வண்ணத் துகள்களை அடுக்கி கையால் மாற்றி அமைப்பதன் மூலம், அவர் கண்கவர் நிறமூட்டும் மற்றும் தீவிரமான கிராஃபிக் தரம் கொண்ட படைப்புகளை உருவாக்கினார். முதலில் 35 மிமீ ஸ்லைட்களாக உருவாக்கப்பட்டு திரையில் காட்டப்பட்ட இந்த படைப்புகள், அதிக மாறுபாடு கொண்ட வண்ணப் புகைப்படங்களில் அவரது திறமையை வெளிப்படுத்துகின்றன. மருத்துவ புகைப்படக் கலைஞராக இருந்த அனுபவம் டானுக்கு தொழில்நுட்ப துல்லியத்தை வழங்கியது; அதனுடன் துணிச்சலான கலை முயற்சிகளை இணைத்து, சிங்கப்பூரின் மாறிக்கொண்டிருந்த நிலப்பரப்பையும் அதிலுள்ள மனித அனுபவத்தையும் பதிவு செய்தார்.
"My photographic style is simple. It's realistic and down-to-earth. It's about finding unique qualities about life and turning them into a photograph worthy as a memento, as a valuable object for appreciation." Lim Kwong Ling, *Stories in Light*, 2023. Lim Kwong Ling began learning photography in his thirties, drawing	"என் புகைப்படக் கலை முறை எளிமையானது. இது யதார்த்தமானதும், நடைமுறைக்கு ஏற்றதுமாகும். வாழ்க்கையின் தனித்துவமான அம்சங்களை கண்டுபிடித்து, அவற்றை ஒரு நினைவுப் பொருளாகவும், ரசித்துப் போற்றத்தக்க அதிக மதிப்புமிக்க

influence from everyday life and the desire to document moments with his family. He took a beginner's photography course at Singapore's Adult Education Board, taught by local photographer Lee Sow Lim. In 1965, Lim co-founded the Photo-Art Association of Singapore and participated widely in local and international salon exhibitions. However, by the 1970s, he distanced himself from typical salon photography, disagreeing with its emphasis on pictorial aesthetics. Instead, Lim turned to documentary photography, dedicating himself to chronicling life in Singapore without resorting to staged scenes or poses.	பாராட்டுக்குரிய புகைப்படங்களாக மாற்றுவதே என் நோக்கம்." லிம் குவாங் லிங், *ஒளியில் கதைகள்*, 2023. லிம் குவாங் லிங் தனது முப்பதுகளில் புகைப்படக் கலையைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினார்; அன்றாட வாழ்க்கையிலிருந்து மற்றும் குடும்பத்துடன் கூடிய தருணங்களைப் பதிவு செய்யும் ஆசையிலிருந்து அவர் ஊக்கமடைந்தார். சிங்கப்பூர் வயது வந்தோர் கல்வி வாரியத்தில், புகைப்படக் கலைஞர் லீ சோ லிம் நடத்தும் ஆரம்ப நிலை புகைப்படக் கலைப் பாடநெறியில் அவர் கலந்து கொண்டார். 1965-இல், லிம் சிங்கப்பூர் புகைப்படக் கலை சங்கத்தை நிறுவியவர்களில் ஒருவராக இருந்தார்; மேலும் உள்ளூர் மற்றும் சர்வதேச சலோன் கண்காட்சிகளில் பரவலாக பங்கேற்றார். ஆனால் 1970களில், படம் சார்ந்த அழகியலுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை ஏற்காததன் காரணமாக, வழக்கமான முக்கியத்துவம் அளிக்கும் சலோன் புகைப்படக் கலையிலிருந்து அவர் விலகினார். அதற்குப் பதிலாக, லிம் ஆவண புகைப்படக் கலையில் முழுமையாக ஈடுபட்டு, மேடை அமைக்கப்பட்ட காட்சிகள் அல்லது போஸ்கள் இல்லாமல், சிங்கப்பூரில் நிகழும் வாழ்க்கையைப் பதிவு செய்யத் தன்னை அர்ப்பணித்தார்.

Lim Kwong Ling (林光霖) (b. 1932, Singapore) *Marine Parade in the Past* 1970 Gelatin silver print on paper Gift of the artist and family Collection of National Gallery Singapore 2019-00010 This photograph reflects a recurring theme in Lim Kwong Ling's oeuvre—the often-overlooked workers behind Singapore's changing urban landscape. In the background, towering pristine white Housing Development Board flats symbolise modernity and progress, while in the foreground, workers toil on darkened ground under the sun. With no staging or manipulation, Lim composes the scene through careful composition and strong visual storytelling. This clever juxtaposition draws attention to the manual labourers driving the nation's development.	லிம் குவாங் லிங் (லின் குவாங் லின்) (பிறப்பு: 1932, சிங்கப்பூர்) *மரைன் பரேடு இன் தி பாஸ்ட்* 1970 காகிதத்தில் ஜெலட்டின் சில்வர் அச்சு ஓவியரும் அவரது குடும்பமும் வழங்கிய நன்கொடை சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு 2019-00010 இந்த புகைப்படம் லிம் குவாங் லிங் படைப்புகளில் தொடர்ந்து வரும் ஒரு கருப்பொருளை பிரதிபலிக்கிறது — சிங்கப்பூரின் மாறிக்கொண்டிருக்கும் நகரப் பரப்பின் பின்னணியில் பெரும்பாலும் கவனிக்கப்படாத தொழிலாளர்கள். பின்னணியில், உயரமான வெண்மையான வீடமைப்பு வாரிய குடியிருப்புகள் நவீனத்துவத்தையும் முன்னேற்றத்தையும் குறிக்கின்றன; முன்னணியில், தொழிலாளர்கள் இருண்ட நிலத்தில் வெயிலில் உழைக்கின்றனர். மேடை அமைப்போ அல்லது செயற்கை மாற்றமோ இல்லாமல், லிம் கவனமாக காட்சியை அமைத்து, வலுவான காட்சி மொழியில் கதையைச் சொல்கிறார். இந்த புத்திசாலித்தனமான ஒப்பீடு, நாட்டின் முன்னேற்றத்தை இயக்கும் கைவேலை தொழிலாளர்களை கவனத்திற்கு கொண்டு வருகிறது.
Yusman Aman (b. 1937, Singapore; d. 2016, Malaysia) *Structure I* 1973	யுஸ்மான் அமான் (பிறப்பு 1937, சிங்கப்பூர்; இறப்பு 2016, மலேசியா) *ஸ்ட்ரக்சர் I*

Batik Collection of National Gallery Singapore P-0184 Rectilinear forms in soft pink hues jostle, stack and cascade across this batik painting, creating a dynamic rhythm. Initially a figurative painter, Yusman became known for his experiments with batik, which he combined with acrylic paint. A self-taught artist who worked in commercial contexts, Yusman's practice bridges craft traditions and modernist abstraction. Like many artists in Singapore during the 1960s and 1970s, he pursued new visual languages that could express a changing cultural and social landscape.	1973 பாடிக் சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் சேகரிப்பு P-0184 மென்மையான இளஞ்சிவப்பு நிறத்தில் செங்குத்து மற்றும் கிடைமட்ட வடிவங்கள் இந்த பாடிக் ஓவியத்தில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து, ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு, அருவி போலப் பாய்ந்து, ஒரு துடிப்பான தாளத்தை உருவாக்குகின்றன. முதலில் உருவ ஓவியராக இருந்த யுஸ்மான், பாடிக் மற்றும் அக்ரிலிக் வண்ணம் ஆகியவற்றை இணைத்து மேற்கொண்ட முயற்சிகளுக்காக பிரபலமானார். சுயமாக ஓவியம் கற்றுக்கொண்ட மற்றும் வணிகத் துறையில் பணியாற்றிய யுஸ்மானின் பணி பாரம்பரிய கைவினையையும் நவீன அருவக் கலையையும் இணைக்கிறது. 1960களிலும் 1970களிலும் சிங்கப்பூரில் இருந்த பல கலைஞர்களைப் போலவே, அவரும், மாறிவரும் கலாச்சாரம் மற்றும் சமூக சூழலை வெளிப்படுத்தும் புதிய காட்சி மொழிகளைத் தேடினார்.
"It has to come from your inner self, your power and your character. There's no secret to those things. They are real because they come from the inside. My body is moving and my emotions are encapsulated in that moment." Tan Teng-Kee, *A Fact Has No Appearance: Art Beyond the Object*, 2015.	"அது உங்களது உள்ளார்ந்த உணர்விலிருந்தும், உங்களது சக்தியிலிருந்தும், உங்கள் தன்மையிலிருந்தும் வர வேண்டும். அவற்றில் எந்த ரகசியமும் இல்லை. அவை உண்மையானவை, ஏனெனில் அவை உள்ளிருந்து வருகின்றன.

Tan Teng-Kee was a sculptor and a painter, and an influential teacher during the 1970s and 1980s. He studied Chinese ink and Western painting in Hong Kong before training in sculpture and printmaking at the Staatliche Kunstakademie in Germany. Tan moved to Singapore in 1970, where he taught applied sculpture at the Baharuddin Vocational Institute. Tan played a pivotal role in introducing new approaches to sculpture in Singapore, using industrial metals to construct dynamic abstract forms. His works are rooted by his foundation in calligraphy and ink as well as the influence of his teacher, sculptor Norbert Kricke.	என் உடல் அசைந்துகொண்டிருக்கிறது; அந்தக் கணத்தில் என் உணர்வுகள் அனைத்தும் அந்த இயக்கத்தில் அடங்கியுள்ளன.” டான் தெங்-கீ, *ஒரு உண்மைக்கு தோற்றம் இல்லை: பொருளுக்கு அப்பால் கலை*, 2015. சிற்பியும் ஓவியருமான டான் தெங்-கீ, 1970, 1980களில் தாக்கம் கொண்ட ஆசிரியராகவும் இருந்தார். ஹாங்காங்கில் சீன மை ஓவியம் மற்றும் மேற்கத்திய ஓவியம் கற்றுக்கொண்ட அவர், ஜெர்மனியின் ஸ்டாட்லிச்சே குன்ஸ்டாகடமியில் சிற்பக்கலை மற்றும் அச்சுப்பதிப்பில் பயிற்சி பெற்றார். 1970-இல் டான் சிங்கப்பூருக்கு வந்து, பஹாருதீன் தொழில்நுட்ப நிறுவனத்தில் செயல்பாட்டு சிற்பக்கலையைக் கற்றுக்கொடுத்தார். சிங்கப்பூரில் புதிய சிற்பக் கலையை அறிமுகப்படுத்துவதில் டான் முக்கிய பங்கு வகித்தார்; தொழில்துறை உலோகங்களைப் பயன்படுத்தி இயக்கம் நிறைந்த கருத்தியல் வடிவங்களை உருவாக்கினார். அவரது படைப்புகள் எழுத்துக்கலை, மை மற்றும் அவரது ஆசிரியர், சிற்பி நோர்பர்ட் கிரிக்கே என்பவரின் தாக்கத்தால் ஆழமாக வேரூன்றியவை.
Tan Teng-Kee (陈录记) (b. 1937, Malaysia; d. 2016, Australia) *Maquette for Rider* 1983 Steel, paint and wood Gift of the artist Collection of National Gallery Singapore 2016-00482	டான் தெங்-கீ (சென் லூ ஜி) (பிறப்பு 1937, மலேசியா; இறப்பு 2016, ஆஸ்திரேலியா) *ரைடருக்கான மாதிரி* 1983 இரும்பு, வண்ணம் மற்றும் மரம் கலைஞரின் அன்பளிப்பு

